மதிப்பிற்குரியவர்களுக்கு
RAMRAJ
காட்டன்
இந்தியாவின் கலாச்சாரம்

மலர் 9 • இதழ் 3 • செப்டம்பர் 2024 • விலை ரூ.18/-

# வெண்மை

தமிழ் மாத இதழ் VENMAI

## எண்ணங்கள்



# கொடை
## சிறப்பிதழ்





Shop Online @ www.ramrajcotton.in

RAMRAJ
காட்டன்
இந்தியாவின் கலாச்சாரம்

கருணையையும் அன்பையும் எப்போதும் வெளிப்படுத்தி
கனிவான செயல்களையே தங்கள் அடையாளங்களாக மாற்றி
உலகத்துக்கே உதாரணமாக வாழ்வதன் பெருமை உணர்த்தும்



# மதிப்பிற்குரியவர்களுக்கு...

**வணக்கம்.**

கொடையுள்ளம் கொண்டவர்கள் நிரந்தரச் செல்வந்தர்கள். அவர்களிடம் ‘இல்லை’ என்ற வார்த்தையே இருக்காது. பொருள் இல்லையென்றாலும் உடல் உழைப்பாலும், தங்கள் எண்ணங்களாலும் செல்வந்தர்களாகக் களத்தில் நிற்பார்கள். அதனால்தான், ‘தேவை அறிந்து உடனே கொடுப்பது, இருமுறை கொடுத்ததற்குச் சமம்’ என்றனர் அறிஞர்கள். கொடுப்பதைவிட, ஒருவரின் தேவையறிந்து உடனே கொடுப்பது உயரிய குணம்.

ஒரு நடுத்தரக் குடும்பம்... குடும்பத் தலைவர் திடீரென விபத்தில் இறந்துவிடுகிறார். போன மாதம் வரை வந்த வருமானம் திடீரென்று இல்லாமல் போகிறது. ஆனால், செலவுகள் அதேதான்! வீட்டு வாடகை, மின் கட்டணம், மளிகைச் சாமான்கள், குழந்தைகளுக்குக் கல்விக்கட்டணம் என்று எந்தச் செலவும் குறைந்துவிடப் போவதில்லை.

அந்த நேரத்தில் அந்தக் குடும்பத்துக்கு அக்கம்பக்க வீட்டினரும், உறவுகளும் நண்பர்களுமே கைகொடுத்தார்கள். பக்கத்து வீட்டுக்காரர் ஒரு நிறுவனத்தில் பேசி, இறந்தவரின் மனைவிக்கு வேலை வாங்கிக் கொடுத்தார். குடும்பத் தலைவர் வாங்கிய சம்பளத்தில் பாதிதான் என்றாலும், ஒரு நிரந்தர வருமானத்துக்கு வழி பிறந்தது.

குழந்தைகளின் பள்ளிக்குச் சென்ற ஒரு குடும்ப நண்பர், அவர்களின் பள்ளிக்கட்டணத்தைத் தானே கட்டிவிட்டார். கட்டியது யார் என்றுகூட அந்தக் குடும்பத்துக்குத் தெரியாது. விடியற்காலை கதவைத் திறந்து பார்த்தால், வாசலில் மளிகைச் சாமான்கள் இருக்கும், ஒரு நாள் அரிசி மூட்டை இருக்கும், இன்னொரு நாள் குழந்தைகளுக்குத் தின்பண்டங்கள் இருக்கும். ‘தாங்கள் பிறரின் கையை எதிர்பார்த்து இருக்கிறோம்’ என்ற தாழ்வு மனப்பான்மையை அந்தக் குடும்பத்தினருக்கு ஏற்படுத்தாமல் எல்லோரும் உதவி செய்தார்கள்.

இந்த உலகின் பெரிய பணக்காரர் யார் எனக் கேட்டால், நான் அந்தக் குடும்பத்தை ஆதரிப்பவர்களையே குறிப்பிடுவேன். அவர்களிடம் இருக்கும் செல்வத்தைவிட, தேவை உள்ளவர்களோடு பகிர்ந்துகொள்ள வேண்டும் என்கிற அந்த உணர்வே அவர்களைச் செல்வச்செழிப்பு மிக்கவர்களாக ஆக்குகிறது.

பகிர்ந்தளிக்கும் இந்த உயர்வான குணத்தைக் குழந்தைகளிடம் விதைக்கும் நோக்கத்தோடு மகாபாரதக் கிளைக்கதைகள் நிறைய உண்டு. ‘கொடுப்பதில் சிறந்தவர் தர்மரா, கர்ணனா’ என்கிற சந்தேகம் அர்ஜுனனுக்கு வந்தது. ‘என் அண்ணன் தர்மர் அனைவருக்குமே தர்மம் செய்கிறார். அதனால்தான் அவருக்கு தர்மர் என்றே பெயர். துரியோதனன் கொடுத்த செல்வத்தைப் பகிர்ந்து தருகிற கர்ணனுக்குத் தர்மரைவிடக் கொடை வள்ளல் என்கிற பெருமை ஏன் இருக்கிறது?’

இதை அர்ஜுனனால் புரிந்துகொள்ள முடியவில்லை. கிருஷ்ணர் எளிமையாகப் புரியவைத்தார்.

ஒரு கடுமையான மழைக்காலம். தர்மரிடம் சென்ற கிருஷ்ணர், “தர்மா, எங்கள் அரண்மனையில் உணவு சமைக்கத் தேவையான பொருள்கள் அனைத்தும் இருக்கின்றன. ஆனால் விறகு மழையில் நனைந்துவிட்டதால், பட்டினி கிடக்கிறோம். எனக்கு விறகு ஏற்பாடு செய்து தரமுடியுமா?” எனக் கேட்டதும், தர்மர் வருத்தப்பட்டார்.

“கிருஷ்ணா, அரண்மையில் இருந்த பெரும்பாலான விறகு நனைந்துவிட்டது. இங்குள்ளவர்களுக்குச் சமைப்பதற்கான விறகு மட்டுமே இருக்கிறது. மழைக்காலம் முடியும்வரை நீ அரண்மனையில் வந்து எங்களோடு சாப்பிடு” என்று அழைப்பு விடுத்தார். அர்ஜுனனுக்கு ஆனந்தம். அண்ணன் அரண்மனையில் சாப்பிட அழைப்பு விடுத்து தர்மர் என நிரூபித்துவிட்டதாகப் பெருமைப்பட்டான்.

கிருஷ்ணர் மாறுவேடத்தில் சென்று கர்ணனைச் சந்தித்து, தன்னிடம் சமைக்க விறகு இல்லை என்கிற கதையைக் கூறினார். அவனிடமும் தானமாகத் தருகிற அளவு விறகு இல்லை. கர்ணன் யோசிக்கவே இல்லை. தன் அரண்மனையில் இருக்கும் பழைய கட்டுமானங்களை உடைத்து, அதிலிருந்த கதவுகள், ஜன்னல்கள் மற்றும் உத்தரங்களைக் கொடுத்தான். ‘உங்கள் பசியைப் போக்காத கதவும் ஜன்னலும் எதற்கு?’ என்று கேட்ட கர்ணனைப் பார்த்து கிருஷ்ணரே நெகிழ்ந்தார்.



விறகு கேட்டது கிருஷ்ணர் என்று தெரிந்தும். ‘அரண்மனையில் சாப்பிடுங்கள்’ என்று சொன்ன தர்மரைவிட, உதவி கேட்டது யாரென்றே தெரியாமல் கதவு,



ஜன்னல்களை உடைத்துக் கொடையளித்த கர்ணனே சிறந்த கொடை வள்ளல்' என்றார் கிருஷ்ணர்.

இந்தப் புராணக் கதை 'இருக்கும் செல்வத்தைவிட, கொடுக்க வேண்டும் என்ற எண்ணமே உயர்வானது' என்பதைத் தெளிவாக விளக்கும். கொடையுள்ளம் கொண்டவர்கள் தம்மிடம் கொடுப்பதற்கு எதுவும் இல்லை என்றாலும், தம்மையே கொடுக்க முன்வருவார்கள். பேரிடர்க் காலங்களில் உயிரைப் பணையம் வைத்து இறங்கி, பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவும் தன்னார்வலர்களைப் பார்க்கும்போது ராணுவத்திற்கு இணையாக எண்ணத் தோன்றுகிறது.

சமீபத்தில் பெய்த பெருமழையில் கேரள மாநிலம் வயநாட்டில் ஏற்பட்ட நிலச்சரிவில் கிராமங்களே புதைந்து போயின. ஆயிரக்கணக்கான மக்கள் உறவுகளை, உடைமைகளை இழந்து தவித்து நின்றனர். கேரள அரசுடன் இந்திய ராணுவம் உட்பட, பல்லாயிரக்கணக்கான தன்னார்வலர்கள் களத்தில் இறங்கி மீட்புப் பணியில் ஈடுபட்டனர். பள்ளி செல்லும் மாணவர்கள்கூடத் தங்களுடைய சேமிப்பிலிருந்து ஒரு தொகையை நன்கொடையாகக் கொடுத்தனர். அனைத்தும் இழந்து தவித்த மக்களின் இருள் நிறைந்த வாழ்வில் ஒளிக்கீற்றைப்போல அனைவரும் அளித்த உதவி நம்பிக்கை வெளிச்சத்தை அளித்தது.

ராம்ராஜ் காட்டன் நிறுவனம் எப்போதுமே மக்களுக்கான நிறுவனமாகவே செயல்பட்டு வருகிறது. தேவை அறிந்து கொடுப்பதைக் கடமை உணர்வாகவே கொண்டிருக்கிறது. கொரோனா காலத்தில் பல நிறுவனங்கள் சம்பளமே தர இயலாத நிலையில் இருந்தபோது, ராம்ராஜ் காட்டன் தன் தொழிலாளர்களுக்குத் துணை நின்றதோடு, நெசவாளர்களுக்கும் தம்மால் இயன்ற உதவிகளைச் செய்தது. கல்வி, சுற்றுச்சூழல், ஆன்மிகம், இலக்கியம் எனச் சமுதாய வளர்ச்சிக்கான அனைத்துத் தொண்டுகளிலும், பேரிடர்க் காலங்களிலும் மக்களுடன் இணைந்தே இருந்துவருகிறது ராம்ராஜ் காட்டன்.

கொடுக்கும் உதவி சிறியதோ, பெரியதோ, கொடுப்பதே முக்கியம் என்பதை உணர்ந்து செயல்படுகிறோம். வெள்ள பாதிப்பு, புயல் நிவாரணம், வறட்சிக்காலம் என எல்லாச் சூழல்களிலும் மக்களுடன் கைகோர்த்து நிற்பதைப் பெருமையாகவும் கடமையாகவும் கருதி இருக்கிறோம். வயநாட்டில் மக்களுக்கு ஏற்பட்ட இழப்பை எதைக் கொடுத்தும் ஈடு செய்ய இயலாது. ஆனால், 'நாங்கள் இருக்கிறோம்' என்கிற நம்பிக்கையைத் தர முடியும். ராம்ராஜ் காட்டன் நிறுவனம் உடனடியாக நடிகர் மற்றும் ராம்ராஜ் விளம்பரத் தூதர் திரு. ஜெயராம் அவர்களுடன் இணைந்து கேரள முதல்வர் மாண்புமிகு பினராயி விஜயன் அவர்களைச் சந்தித்து நிதியுதவியைச் செய்தது. இதுதவிர வயநாடு மக்களுக்கு ராம்ராஜ் காட்டன் நிறுவனம் நேரடியாகவும் பல லட்சம் மதிப்புள்ள ஆடைகளை அளித்துவருகிறது. நிறுவனம் பெரும் லாபம் சம்பாதிக்கும்போது கிடைத்த மனநிறைவைவிட, மிகப்பெரிய மனநிறைவு இதுபோல் தேவை உள்ளவர்களுக்கு உதவும்போது கிடைக்கிறது. இந்த மேன்மையான உணர்வு, பொறுப்பை உணர்ந்து உதவிகளைச் செய்யும் ஒவ்வொரு தருணத்திலும் கிடைத்திருக்கிறது.

வள்ளுவர் இதை 'ஈத்துவக்கும் இன்பம்' என்றார். கொடுப்பதில் கிடைக்கும் இன்பம் ஈடு இணையற்றது. தேவை உள்ளவர்களுக்குக் கொடுத்துப் பாருங்கள்... இந்த இன்பம் எத்தகையது என்பதை நன்றாக உணரமுடியும்.



The Culturepreneur

குரு அருள்

வாழ்க வையகம்... வாழ்க வளமுடன்!

**கே.ஆர்.நாகராஜன்**

நிறுவனர் – ராம்ராஜ் காட்டன்



# கொடுப்பதால் கிடைக்குமே பலன்கள்!

ஒரு பள்ளியிலிருந்து நிறைய மாணவர்கள், நாட்டு நலப்பணித் திட்டத்தின் சார்பில் சமுதாயப்பணி செய்வதற்காக ஒரு கிராமத்துக்கு வந்திருந்தார்கள். அவர்களில் மூன்று சிறுவர்கள் தனியாகப் பிரிந்து கிராமத்தின் எல்லைக்கே போனார்கள். அங்கே வயல்வெளிகள் பசுமையாகப் பரந்திருக்க, அவற்றை ரசித்தபடி நடந்து போனார்கள்.

எங்குமே ஆள் நடமாட்டம் இல்லாமல் இருக்க, ஒரே ஒரு வயலில் மட்டும் விவசாயி ஒருவர் தனியாக வேலை பார்த்துக்கொண்டிருந்தார். நெல் வயலுக்குள் நாற்று நட்டு முடிந்திருக்க, சேற்றுக்குள் இறங்கி வரப்புகளைச் சரிசெய்தபடி இருந்தார் அந்த விவசாயி. உடல் முழுக்கச் சேறு அப்பிக்கொள்ளும் வேலை என்பதால், தன் சட்டை மற்றும் வேட்டியை வரப்பில் அவிழ்த்து வைத்துவிட்டுக் கோவணத்துடன் உழைத்தார் அவர்.

சிறுவர்களுக்கு அதைப் பார்த்ததும் சிரிப்பு வந்தது. “அவருக்குத் தெரியாமல் ரகசியமாகப் போய் அந்த ஆடைகளையும் அவரது செருப்பையும் எடுத்து எங்காவது மறைத்து வைத்துவிடலாமா? நாமும் அதன்பின் மரங்களின் பின்னால் ஒளிந்துகொண்டு, அவர் என்ன செய்கிறார் என்று பார்ப்போம். எல்லாவற்றையும் காணாமல் அவர் தேடுவதைப் பார்க்கச் சிரிப்பாக இருக்கும்” என்று கிசுகிசுப்பான குரலில் கேட்டான் ஒருவன். இன்னொரு சிறுவன் உடனே, “செம ஐடியா” என்று சொல்லி உடைகளைத் திருடப் போனான்.

மூன்றாவது சிறுவனுக்கு அப்படிச் செய்ய மனசில்லை. மற்ற இருவரையும் தடுத்தான். “அந்த மனிதரைப் பார்த்தால் பாவமாக இருக்கிறது. அவர் அவிழ்த்து வைத்திருக்கும் உடைகளைப் பார். எல்லாம் நைந்து போய் இருக்கின்றன. அவர் செருப்பும் கிட்டத்தட்ட அறுந்துபோகும் நிலையில் இருக்கிறது. அவரைப் போய் அழவைத்து வேடிக்கை பார்ப்பது நன்றாக இருக்காது. நமக்குத் தேவை ஒரு வித்தியாசமான அனுபவம்தானே! வேண்டுமானால் ஒன்று செய்யலாம். நமக்கு பாக்கெட் மணியாக வீட்டில் கொடுத்த பணத்தை எடுத்துப் போய் அவர் சட்டைக்கு அடியிலும் வேட்டிக்கு அடியிலும் ஒளித்து வைப்போம். அது எப்படி வந்தது என்று அவர் தேடுவார் இல்லையா? அதைப் பார்க்க வேடிக்கையாக இருக்கும்” என்றான் அவன்.

அப்படியே அவர்கள் பணத்தை ரகசியமாகக் கொண்டுபோய் வைத்துவிட்டு, மரங்களின் பின்னால்

போய் ஒளிந்தார்கள். கொஞ்ச நேரத்தில் விவசாயி வேலைகளை முடித்துவிட்டு, தண்ணீரில் கை, கால்களைக் கழுவிக்கொண்டு வந்தார். வேட்டியை அணிவதற்காக எடுத்தபோது, அதன் அடியில் இருந்த 100 ரூபாய் நோட்டைப் பார்த்துத் திகைத்தார். அதை யார் வைத்திருப்பார்கள் என்று சுற்றும் முற்றும் பார்த்தார். அதைக் கையில் வைத்துக்கொண்டு நம்பமுடியாமல் பார்த்தபடி இருந்தார். குழப்பத்துடன் வேட்டியைக் கட்டிக்கொண்டு சட்டையை எடுத்தபோது, அதன் அடியிலும் இரண்டு 100 ரூபாய் நோட்டுகள் இருந்ததைக் கண்டதும் இன்னும் பதற்றமாகிவிட்டது அவருக்கு!

இங்கும் அங்கும் நடந்தார். பணத்தை எடுத்துக்கொள்வதா, வேண்டாமா என்று நீண்ட நேரம் யோசித்தார். 'யாரும் இல்லாத இடத்தில் பணத்தை வைத்தது கடவுளின் செயல்தான்' என்று முடிவுக்கு வந்தார். அப்படியே மண்டியிட்டு அமர்ந்து வானத்தைப் பார்த்துப் பிரார்த்தனை செய்தார். "கடவுளே, உடல்நலமில்லாத என் மனைவியை மருத்துவமனைக்குக் கூட்டிப் போகப் பணமில்லாமல் தவித்தேன். என் தேவையைப் புரிந்துகொண்டு யார் மூலமாகவோ பணத்தைக் கொடுத்திருக்கிறாய். உன் கருணை பெரியது" என்று கண்ணீருடன் நன்றி சொல்லிவிட்டு எழுந்து வீட்டுக்குப் போனார்.



சிறுவர்கள் இதைப் பார்த்து நெகிழ்ந்துவிட்டார்கள். விளையாட்டும் வேடிக்கையுமாக வந்த அவர்கள், இப்போது புது மனிதர்களாக மாறியிருந்தார்கள். 'நாம் ஒரு பெரிய நற்செயலைச் செய்திருக்கிறோம்' என்ற பூரிப்பு அவர்களுக்கு ஏற்பட்டது. புன்னகையுடன் அவர்கள் மூவரும் கைகோர்த்தபடி ஊருக்குள் திரும்பினார்கள்.

நமக்குத் தெரிந்த ஒருவருக்கோ, அல்லது முகம் தெரியாத யாரோ ஒருவருக்கோ கொடையாக நாம் எதையாவது கொடுப்பது, நமக்கும் பலன் தருகிறது, பெறுகிற அவருக்கும் நன்மை தருகிறது. அந்தப் பலன்கள் என்னென்ன?

- **நிறைவான வாழ்க்கை:** அடுத்தவர்களுக்காக எதையும் கொடுக்கும் கனிந்த மனம் படைத்தவர்கள், மிகுந்த மனநிறைவுடன் மகிழ்ச்சியாக வாழ்கிறார்கள். கருணையுடன் எவருக்கும் செயல்களாலும் பொருள்களாகவும் உதவிகள் செய்து மகிழ்பவர்கள், ஆரோக்கியமாக நீண்ட ஆயுள் வாழ்கிறார்கள் என மருத்துவ ஆய்வுகள் நிரூபித்துள்ளன.
- கொடை உள்ளம் கொண்டவர்களுக்கு தன்னம்பிக்கை அதிகரிக்கிறது. கருணையும் கனிவும் அவர்களை உற்சாகமான மனநிலை கொண்டவர்களாக மாற்றுகின்றன. அவர்களுக்கு இந்தக் கொடை உள்ளத்தால் கிடைக்கும் திருப்தி, செரடோனின் மற்றும் டோபமைன் ஹார்மோன்களை அதிகம் சுரக்கச் செய்கிறது. அது அவர்களைத் திறமையானவர்களாகவும் சுறுசுறுப்பாகவும் மாற்றுகிறது.
- கொடை உள்ளம் தரும் மனநிறைவால், அவர்களின் ரத்த அழுத்தம் குறைகிறது. இதனால் அவர்களின் இதயச் செயல்பாடு ஆரோக்கியம் அடைகிறது. அவர்களுக்கு மோசமான இதயநோய்கள் வரும் ஆபத்துக் குறைகிறது.
- கொடையுள்ளம் கொண்டவர்களுக்கு கார்டிசோல் ஹார்மோன் சுரப்பு கட்டுக்குள் வருவதால், மன அழுத்தம், டென்ஷன் இல்லாத வாழ்க்கை சாத்தியமாகிறது. மனநலப் பிரச்னைகளின் ஆரம்பக்கட்டத்தில் இருப்பவர்கள்கூட, சமூக சேவை, பிறருக்குக் கருணையுடன் கொடைகள் செய்வது என்று இருக்கும்போது அவர்களின் மனநலம் மேம்படுகிறது என ஆய்வுகள் சொல்கின்றன.
- சமூகத்தில் பலருடன் பழகி நிறைய பேருக்கு உதவிகள் செய்து வாழும்போது ஒருவரின் சமூகப்பண்பு மேம்படுகிறது. மற்றவர்களுடன் அவருக்கு இருக்கும் உறவு இன்னும் நெருக்கமாகிறது. வாழ்க்கை மீது பிடிப்பும் நிறைவும் ஏற்படுகிறது.
- ஒருவர் அக்கறையுடன் செய்யும் உதவிகள், இன்னும் பல பேரை அதேபோல உதவிகள் செய்யத் தூண்டுகின்றன. குளத்தில் கல்லைப் போட்டதும் அலைகள் உருவாகிப் பரவுவது போல, இது ஒரு தொடர்விளைவாக நன்மைகளை நிறைய பேருக்குக் கொண்டுவருகிறது. இதனால் இந்தக் கொடையாளர்களுக்கு சமூகத்தில் நன்மதிப்பு ஏற்படுகிறது.
- அலுவலகம் அல்லது தொழில் செய்யும் இடத்தில் கொடை உள்ளம் கொண்டவர்கள் நிறைய பேர் இருக்கும்போது, மனநிறைவுடன் வேலை பார்க்கும் சூழல் அமைகிறது. அங்கு உற்பத்தித் திறன் மேம்படுகிறது. ●

## உன்னைப் போல் ஒருவன்!



லண்டன் நகரத்தின் முக்கியமான சந்திப்பில் உள்ள பாலத்தின் அருகே அமர்ந்து வயலின் வாசித்துக்கொண்டிருந்தான், பார்வையற்ற இளைஞன் ஒருவன். யாசகம் பெறுவதுதான் அவன் இசையின் நோக்கம். நெரிசலான அந்தச் சாலையில் நிறைய பேர் போனாலும், யாரும் அவனுக்கு யாசகம் செய்யவில்லை. மக்கள் சில்லரைக் காசுகளைப் போடுவதற்காக அவன் விரித்து வைத்திருந்த துணி, காலியாகக் கிடந்தது. பசியிலும் ஏமாற்றத்திலும் தவித்த அவன், அதற்குமேல் வயலின் வாசிக்கக்கூட முடியாத அளவுக்கு சோர்வில் இருந்தான். 'தினம் தினம் என் நிலைமை இப்படியே இருக்கிறதே' என்று நொந்துகொண்டான்.

அப்போது யாரோ ஒருவர் நிதானமாக நடந்துவந்து அவன் அருகே நிற்கும் சத்தம் கேட்டது. "ஐயா, ஏதாவது தர்மம் செய்யுங்கள்" என்று அவன்

## மகிழ்ச்சியான செய்தி!

நாட்டின் புகழ்பெற்ற டென்னிஸ் விளையாட்டு வீரர் ஒரு போட்டியில் ஜெயித்தார். வெற்றிக்கோப்பையுடன் பெரிய பரிசுத்தொகையும் அவருக்குத் தரப்பட்டது. உற்சாகமாக அவர் மைதானத்தை விட்டு வெளியில் வந்தபோது ஏராளமான ரசிகர்கள் அவரை வாழ்த்தினர். சிலர் அவரை நெருங்கி செல்ஃபி எடுத்துக்கொண்டனர். அப்போது, ஏழ்மையான தோற்றத்தில் இருந்த ஒரு நடுத்தர வயதுப் பெண்மணி அவரை நெருங்கிச் சென்று ஏதோ சொல்ல முயன்றார். மைதானப் பாதுகாவலர்களும் போலீஸாரும் அவரைத் தடுத்து அங்கிருந்து துரத்த முயன்றனர்.

அதைக் கவனித்த அந்த வீரர், ரசிகர்களிடமிருந்து விலகி அந்தப் பெண்மணியை நெருங்கி வந்தார். 'என்ன விஷயம்?' என்று விசாரித்தார். ''என் மகன் புற்றுநோய் பாதிப்புடன் மருத்துவமனையில் உயிருக்குப் போராடுகிறான். அவன் சிகிச்சைக்குப் பணம் இல்லாமல் சிரமப்படுகிறேன்'' என்று கண்ணீருடன் சொன்னார் அந்தப் பெண். உடனே தன்னிடம் இருந்த மொத்தப் பணத்தையும் அவரிடம் கொடுத்து, "எப்படியாவது உங்கள் மகனைக் காப்பாற்றுங்கள்" என்று சொன்னார் அந்த வீரர்.

சில மாதங்கள் கழித்து அந்த ஊருக்கு மீண்டும் வந்தார் அந்த வீரர். அப்போது அவரைச் சந்தித்த உள்ளூர் மைதான நிர்வாகி, "சார், உங்களுக்கு ஒரு அதிர்ச்சியான செய்தி. போன முறை உங்களிடமிருந்து பணம் வாங்கினாரே ஒரு பெண்மணி, அவர் உங்களை ஏமாற்றியிருக்கிறார். அவர்



மகனுக்கு ஆபத்தான நோயும் இல்லை, அந்தச் சிறுவன் உயிருக்குப் போராடவும் இல்லை" என்றார்.

உடனே வீரர் உற்சாகமாகி அந்த நிர்வாகியைக் கட்டிக்கொண்டார். "ஆஹா... எவ்வளவு மகிழ்ச்சியான செய்தியைச் சொல்லியிருக்கிறீர்கள். அந்தச் சிறுவனை நினைத்து நான் தினம் தினம் கவலைப்பட்டேன். அவனுக்காக கடவுளிடம் பிரார்த்தனை செய்தேன். என் பணம் போனால் போகிறது. நல்லவேளை, அவனுக்கு ஒன்றும் ஆகவில்லை'' என்றார். மகிழ்ச்சியாகக் கொடுப்பவர்களின் மனம் இப்படித்தான் சிந்திக்கும்.

கேட்டான். ஆனால் அவர் தர்மம் செய்யவில்லை. மாறாக, அந்த இளைஞன் கையிலிருந்து வயலினை வாங்கி இசைக்க ஆரம்பித்தார். அதுவரை அவன் கேட்டிராத, மயக்கும் இசை. 'என் வயலினில்கூட இப்படி இசை வருமா?' என்று அவன் வியந்துபோய் மெய்மறந்து அந்த இசையைக் கேட்டான்.

அதுவரை வயலின் இசையைப் பொருட்படுத்தாமல் போய்க்கொண்டிருந்த மக்கள், இந்த இசையால் ஈர்க்கப்பட்டு அருகே வந்தனர். வந்த கலைஞர் கண்களை மூடி வாசித்துக்கொண்டே இருந்தார். மக்கள் இந்த இசையில் மயங்கி, பார்வையற்ற இளைஞனுக்கு ஏராளமான பணத்தை யாசகமாகப் போட ஆரம்பித்தனர். தங்கள் வேலைகளைக்கூட மறந்துவிட்டு எல்லோரும் அங்கே கூட்டமாகக் கூடி இசையை ரசித்தனர். இதனால் பெரும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது. நெரிசலைச் சரிசெய்ய வந்த போலீஸ்காரர்களும் வயலின் இசையில் மயங்கி அப்படியே நின்றுவிட்டனர்.

20 நிமிடங்கள் கழித்து அவர் வயலின் வாசிப்பதை நிறுத்தியபோது, கைத்தட்டலால் வீதியே அதிர்ந்தது. அந்த இளைஞனின் துணி, ஏராளமான பணத்தால் நிரம்பியிருந்தது. வயலினை அவனிடம் கொடுத்துவிட்டு, பணத்தை மொத்தமாகச் சுருட்டிப் பாதுகாப்பாக அவன் இன்னொரு கையில் கொடுத்தார் அவர். "இது உனக்கு அடுத்த ஒரு வருடத்துக்குப் பசி தீர்க்கும்" என்று சொல்லிச் சிரித்தார்.

"ஐயா, நீங்கள் யார்?" என்று இளைஞன் கேட்டபோது, "உன்னைப் போல நானும் ஒரு வயலின் கலைஞன்" என்று சொல்லிவிட்டு அவர் நகர்ந்தார். அவர், இத்தாலியில் பிறந்த உலகப் புகழ்பெற்ற வயலின் மேதை நிக்கோலோ பகானினி.

## விட்டுக் கொடுக்காத நட்பு!

பள்ளிப் பருவத்தில் ஒரே வகுப்பில் அருகருகே அமர்ந்து படித்த நண்பர்கள் இரண்டு பேர். பள்ளியைத் தாண்டியும் அவர்களின் நட்பு இறுக்கமாக இருந்தது. ஆண்டுகள் உருண்டோட, அவர்கள் பிரிந்து வேறு வேறு ஊர்களுக்குப் போக நேர்ந்தது. நண்பர்களில் ஒருவர் சட்டம் படித்து நீதிபதியாகத் தேர்வானார். மிக நேர்மையாகத் தீர்ப்பு வழங்குபவர் என்று பெயரெடுத்தார்.

அவரின் நண்பர் நன்கு படித்து, ஒரு தனியார் நிறுவனத்தில் மேலாளர் பதவி வரை உயர்ந்து வாழ்க்கையில் முன்னேறினார். ஆனால், தவறான மனிதர்களின் அறிமுகம் கிடைத்ததால் குடிப்பழக்கத்துக்கு அடிமையானார். அது அவர் குடும்பத்தின் நிம்மதியைக் கெடுத்தது. மனைவியும் பிள்ளைகளும் அவரை வெறுத்தார்கள். அலுவலகத்திலும் அவர் சரியாக வேலைசெய்ய முடியாமல் போக, ஒரு கட்டத்தில் அவர் வேலையை விட்டுத் துரத்தப்பட்டார். குடும்பம் பிரிந்து சென்றது. வேலையோ, பணமோ இல்லாமல் விரக்தியில் ஒரு நாள் பகலிலேயே குடித்துவிட்டு வாகனம் ஓட்டிவந்து, சாலையோர மின் கம்பத்தில் மோதி விபத்தை ஏற்படுத்தி நீதிமன்றத்துக்குக் கூட்டி வரப்பட்டார்.

புதிதாக வந்திருந்த நீதிபதி வேறு யாருமில்லை, அவரின் பால்ய கால நண்பர்தான்! இருவரும் கட்டிப்பிடித்துக் கண்ணீர் விட்டபடிச் சிறிது நேரம் பேசினார்கள். 'நீதிபதி நேர்மையாகத் தீர்ப்பு வழங்குவாரா, அல்லது தன் நண்பருக்குச் சாதகமாகச் செயல்படுவாரா' என்று எல்லோரும் விவாதம் செய்தனர். சட்டப்படி அபராதம் விதித்த நீதிபதி, அதன்பின் தன் இருக்கையிலிருந்து எழுந்து சென்று நண்பருக்காக அந்த அபராதத்தைத் தானே கட்டினார்.





# கொடுப்பதும் பகிர்வதும்!

மாடி வீட்டில் வசிக்கும் ஒருவர், தன் வீட்டுக்கு எதிரே இருக்கும் குடிசையில் வசிக்கும் ஏழை விவசாயத் தொழிலாளியிடம் அவ்வப்போது பேசுவார். தனியாக வசித்த அந்த இளைஞன், தினமும் வேலைக்குப் போய்விட்டுக் கிடைக்கும் கூலியில், தானே சமைத்துச் சாப்பிட்டு வந்தான்.

ஒருநாள் பணக்காரர் வீட்டில் எல்லோரும் ஊருக்குப் போயிருக்க, வீட்டில் தனியாக இருந்தார் அவர். அப்போது எதிரில் இருக்கும் ஏழையின் வீட்டிலிருந்து இறைச்சி சமைக்கும் மணம் வந்தது. அந்த வாசனை அவரை இழுத்தது. பசியில் இருந்த அவர், அப்படியே எழுந்து அந்த ஏழையின் குடிசைக்குப் போனார்.

ஏழை அவரை அன்புடன் வரவேற்றான். அந்த ஏழையின் குடிசை பிடிக்காவிட்டாலும், உணவின் மணம் அவரை உள்ளே போகச் சொன்னது. "என்ன சமைக்கிறாய்? இவ்வளவு வாசனையாக இருக்கிறது!" என்று கேட்டார்.

"காட்டுக்கோழி இறைச்சி சமைக்கிறேன். பட்டை, ஏலக்காய், கிராம்பு, மிளகு, இஞ்சி, பூண்டு தூக்கலாகப் போட்டுச் சமைத்த கறி. ருசியாக இருக்கும், சாப்பிட்டுப் பாருங்கள்" என்று சொல்லி, அவருக்கு இலை போட்டுச் சாப்பாடு வைத்துக் குழம்பை ஊற்றினான். ஆசையாகச் சாப்பிட்ட பணக்காரர், "இதன் சுவை அற்புதம்" என்று பாராட்டினார்.

அவர் சாப்பிட்டுவிட்டு வெளியே வந்து கைகழுவும்போது தெருநாய் ஒன்று ஏழையின் வீட்டு வாசலில் படுத்திருந்தது. அதைத் திட்டி விரட்டினார் பணக்காரர். "இந்தச் சனியனுக்குத் தினமும் பழைய சோறு வைப்பேன். இங்கேயும் இது வருகிறதா?" என்றார்.

"ஐயா, நீங்கள் சாப்பிட்டீர்களே காட்டுக்கோழிக் கறி. பக்கத்துக் காட்டுக்கு நான் போனபோது, அந்தக் கோழியை இந்த நாய்தான் பிடித்து எனக்குக் கொடுத்தது" என்றான் ஏழை இளைஞன். இதைக் கேட்டதும் பணக்காரர் பொறாமையில் சட்டென்று திரும்பி நாயை முறைத்தார். எதுவும் சொல்லாமல் சென்றுவிட்டார்.

மறுநாள் பணக்காரர் சாப்பிட்டுவிட்டு வெளியில் வந்தபோது, அந்தத் தெருநாய் வந்து உணவுக்காக அவர் முன்பு வாலாட்டிக்கொண்டு நின்றது. "நன்றி கெட்ட நாயே. தினமும் நான்தான் உனக்கு எங்கள் வீட்டில் மிஞ்சிய உணவைக் கொடுக்கிறேன். ஆனால் நன்றியே இல்லாமல் நீ காட்டுக்கோழியைப் பிடித்து அந்த ஏழைக்குக் கொடுக்கிறாய். அப்புறம் எதற்கு உணவுக்காக இங்கு வந்து நிற்கிறாய்?" என்று கேட்டு அதைக் கல்லால் அடித்து விரட்டினார்.

அது அடிவாங்கிக்கொண்டு ஏழையின் வீட்டுக்குப் போனது. அப்போதுதான் வீடு திரும்பியிருந்த ஏழை, "ரொம்ப பசியா இருக்கியா? வா, சாப்பிடலாம்" என்று நாயை அழைத்தான். அவன் திண்ணையில் உட்கார்ந்து சாப்பிட, அது உரிமையுடன் திண்ணைக்கு அருகே தரையில் உட்கார்ந்தது. அவர்கள் ஆளுக்கொரு ஆப்பத்தைப் பகிர்ந்து சாப்பிடுவது பணக்காரருக்குத் தெரிந்தது.

ஏழை இளைஞன் அந்த நாயைத் திட்டவும் இல்லை, கொஞ்சவும் இல்லை. தனக்குச் சரிசமமாக அதை உட்கார வைத்துத் தன் உணவைப் பகிர்ந்துகொண்டான். 'பிறருக்குக் கொடுப்பது என்பது, மிஞ்சியதைத் தூக்கி எறிவதல்ல, அன்பாகப் பகிர்ந்து கொடுப்பதுதான்' என்ற உண்மையைப் பணக்காரர் உணர்ந்தார். அந்த ஏழையின் மதிப்பான அன்பிற்குப் பரிசாகத்தான் நாய் அப்படி வேட்டையாடிக் கொடுத்திருக்கிறது என்பதையும் அவர் தெரிந்துகொண்டார். ●



# ராம்ராஜ் காட்டன் தொழில் வளாகங்களைத் திறந்து வைத்த தமிழக முதல்வர்!

## – ரூ. 1,000 கோடி முதலீட்டில் 7,000 பேருக்கு வேலைவாய்ப்பு



தமிழக தொழில் முதலீட்டாளர் மாநாடு சென்னையில் 21.08.2024 அன்று நடைபெற்றது. இதில் மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், ராம்ராஜ் காட்டன் நிறுவனர் திரு. கே.ஆர். நாகராஜன் அவர்கள் முன்னிலையில், ராம்ராஜ் காட்டன் நிறுவனத்தின் இரண்டு தொழில் வளாகங்களைக் காணொளிக் காட்சி வாயிலாகத் திறந்து வைத்தார். மாண்புமிகு தமிழ்நாடு தொழில்துறை அமைச்சர் திரு. டி.ஆர்.பி.ராஜா, தமிழ்நாடு தலைமைச் செயலாளர் திரு. என்.முருகானந்தம் ஐ.ஏ.எஸ் மற்றும் அதிகாரிகள் உடன் இருந்தனர்.

ஈரோடு மாவட்டம் பெருந்துறை சிப்காட் வளாகத்திலும், திருப்பூர் மாவட்டம் இடுவம்பாளையம் பகுதியிலும் இந்த இரண்டு தொழிற்சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன. கடந்த 2024 ஜனவரியில் சென்னையில் உலகத் தொழில் முதலீட்டாளர்கள் மாநாடு நடைபெற்றது. அப்போது ராம்ராஜ் காட்டன் நிறுவனர் திரு. கே.ஆர். நாகராஜன் அவர்கள், தமிழ்நாட்டில் ரூ. 1,000 கோடி தொழில் முதலீடு செய்வதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களிடம் வழங்கியிருந்தார். இந்த முதலீட்டின் ஒரு பகுதியாக கட்டப்பட்டவையே இந்த இரண்டு தொழில் வளாகங்கள்.


“தற்போது திறக்கப்பட்டுள்ள இந்த இரண்டு தொழிற்சாலைகள் மூலம் நேரடியாக 2,000 பேருக்கும், மறைமுகமாக 5,000 பேருக்கும் வேலைவாய்ப்புக் கிடைக்கும். மொத்தமாக 7,000 வேலைவாய்ப்புகளை ராம்ராஜ் காட்டன் உருவாக்கியுள்ளது. தொழில் முன்னேற்றத்தில் தமிழகத்தை வளர்ச்சிப் பாதையில் உயர்த்திச் செல்வதற்கு ராம்ராஜ் காட்டன் தொடர்ந்து தன் பங்களிப்பை வழங்கும்” என்று திரு. கே.ஆர்.நாகராஜன் நிகழ்ச்சியின்போது கூறினார்.

உலகின் மிகப்பெரிய வேட்டி உற்பத்தி நிறுவனமான ராம்ராஜ் காட்டன், காட்டன் மற்றும் லினன் கொண்டு சுமார் 4,000 வகையிலான ஆடைகளை உருவாக்கி மக்களுக்கு அளிக்கிறது. தரத்துக்கும் வடிவமைப்புக்கும் ஏராளமான விருதுகளை வாங்கியிருக்கும் ராம்ராஜ் காட்டன் நிறுவனம், இந்தியாவின் மிக நம்பகமான பிராண்ட் என்றும் பலமுறை விருது பெற்றுள்ளது. நம் பாரம்பரிய நெசவாளர்களுக்கு வாழ்வாதாரம் அளிப்பதைத் தன் கடமையாகக் கருதிச் செயல்படும் ராம்ராஜ் நிறுவனத்தின் வர்த்தகம் வழியே, சுமார் 50,000 நெசவாளர் குடும்பங்கள் பயனடைந்து வருகின்றன.

# உதவிக்கு நீண்ட கரம்!

ஷாப்பிங் மால் ஒன்றில், ஒரு மூதாட்டியைக் கைத்தாங்கலாகப் பிடித்தபடி நுழைந்தார் இளம்பெண் ஒருவர். மூடியிருந்த கண்ணாடிக் கதவைத் திறந்து பிடித்தபடி, அவர்கள் பத்திரமாக உள்ளே போவதற்கு உதவினார், நடுத்தர வயது மகேஷ். பார்வையாலும் புன்னகையாலும் நன்றி சொல்லிவிட்டு அவர்கள் உள்ளே நகர்ந்தார்கள். கொஞ்ச தூரம் போனதும், சில படிக்கட்டுகளில் ஏற வேண்டியிருந்தது. மூட்டுவலியில் தவிக்கும் மகேஷ், தன்னால் வலியைத் தாங்கிக்கொண்டு படியேற முடியுமா என்று தடுமாற்றத்துடன் படியில் கால் வைத்தார். ஒவ்வொரு படியாக அவர் பொறுமையாக ஏறும்போது ஒரு கரம் அவரைத் தாங்கிப் பிடித்தது. திரும்பிப் பார்த்தால், அந்த மூதாட்டி. "பயப்படாம ஏறுப்பா, வலிக்காது" என்று அவரின் கரம் உதவிக்கு நீண்டது.





# வழியில் தேவைப்படும்!

லடாக் பகுதிக்குச் சுற்றுலா போயிருந்தார் சந்தியா. குளிர் நடுக்கும் மலையில் ஆங்காங்கே சின்னச்சின்ன கிராமங்கள் இருக்கும் பகுதி. அங்கே இருக்கும் பெண்கள் அழகாக ஸ்வெட்டர் பின்னி விற்றுக்கொண்டிருந்தார்கள். எளிய தோற்றத்தில் இருக்கும் ஒரு வீட்டில் விற்ற ஸ்வெட்டரை வாங்கினார் சந்தியா. 250 ரூபாய் விலை சொன்னார்கள். அருகில் எங்கும் ஏ.டி.எம் இல்லை. போன் மூலம் பணம் அனுப்பலாம் என்றால், நெட்வொர்க் சரியாக இல்லாததால் ஜிபே வேலை செய்யவில்லை. தன் பையில் தேடிப் பார்த்து இருந்த பணத்தையெல்லாம் எடுத்தார். மொத்தமாக 200 ரூபாய் மட்டுமே இருந்தது.

"நீங்கள் ஆசையாகக் கேட்கிறீர்கள். பரவாயில்லை, இந்தப் பணம் போதும், கொடுங்கள்" என்று அதை மட்டும் வாங்கிக்கொண்டு 250 ரூபாய் மதிப்புள்ள ஸ்வெட்டரைக் கொடுத்தார் விற்பனைப் பெண். அதோடு நிற்கவில்லை. "எல்லாப் பணத்தையும் கொடுத்துவிட்டு வழியில் ஏதேனும் அவசரம் என்றால் என்ன செய்வீர்கள்? வைத்துக்கொள்ளுங்கள்" என்று சந்தியா கையில் 50 ரூபாயைத் திணித்தார்.

எளிய மனிதர்களின் பெருந்தன்மையை எண்ணி நெகிழ்ந்த சந்தியா, அந்த விற்பனைப் பெண்ணை அரவணைத்து நன்றி சொல்லிவிட்டு விடைபெற்றார்.

# "பகிர்ந்துகொள்ளலாம்!"

இரவு தாமதமாக வேலை முடிந்து தன் அறைக்குத் திரும்பினான் ஓர் இளைஞன். அறையில் போய் சாப்பிடலாம் என வழியில் ஒரு சாலையோர ஹோட்டலில் பார்சல் வாங்கினான். வாங்கிக்கொண்டு கொஞ்ச தூரம் போனதும், "ஐயா" என்று ஒரு குரல் அழைத்தது. கைக்குழந்தையைத் தன் தோளில் படுக்க வைத்தபடி ஒரு பெண்மணி யாசகம் கேட்டார். அவர் கண்களில், முகத்தில், அவர் கெஞ்சும் தொனியில் என்று எல்லாவற்றிலும் பசி வெளிப்பட்டது. பாக்கெட்டில் இருக்கும் சில்லரைகளைத் தருவதில் அர்த்தமில்லை என்று, தன் கையிலிருந்த பார்சலை அப்படியே அவர் கையில் கொடுத்து, "சாப்பிடுங்க" என்றான். தன்னால் ஓர் இரவு பசி தாங்க முடியும் என நினைத்துக்கொண்டான்.

கொஞ்ச தூரம் போனதும் ஒரு கரம் அவனை அரவணைத்தது. திரும்பிப் பார்த்தால், பக்கத்து அறையில் தங்கியிருக்கும் நண்பர். "நான் நாலு தோசை வாங்கியிருக்கேன். ஆளுக்கு ரெண்டா சாப்பிட்டுக்கலாம், வா!" என்று உரிமையோடு தன் அறைக்கு அழைத்தார் அவர்.



# “இந்த வாசனை பிடிக்கும்!”

எலெக்ட்ரானிக்ஸ் பொருட்கள் விற்பனை செய்யும் கடைக்கு வந்தார் ஒரு பெண்மணி. பல்வேறு வாஷிங் மெஷின்களை அவருக்குக் காட்டிய விற்பனைப் பெண் மீனா, அந்தப் பெண்மணி மீது வீசிய வாசனையில் கவரப்பட்டார். ஒரு குறிப்பிட்ட வாசனை திரவிய பிராண்ட் பெயரைச் சொல்லி, “அதுதானே போட்டிருக்கீங்க. எனக்கு இந்த வாசனை பிடிக்கும். சின்ன வயசுல என் அம்மா வாங்கித் தருவாங்க. அம்மா ஆக்சிடென்ட்ல இறந்த பிறகு குடும்பம் தடுமாறி, நான் இங்க வேலை செய்ய வேண்டிய சூழலுக்கு ஆளாகிட்டேன். இந்த சென்ட் வாசனை எனக்கு அம்மாவை ஞாபகப்படுத்திடுச்சு” என்றார் மீனா. வந்த பெண்மணி எதுவும் சொல்லாமல், வாஷிங் மெஷின் வாங்கிக்கொண்டு போனார்.

இரண்டு மணி நேரம் கழித்து அந்தப் பெண்மணி ஒரு புது சென்ட் பாட்டிலுடன் மீண்டும் வந்து மீனாவிடம் அதைக் கொடுத்தார். “என் பேச்சைக் கேட்காம கல்யாணம் செய்துக்கிட்டு தனியா எங்கேயோ போயிட்ட மகளுக்குக் கொடுத்ததா நினைச்சுக்கறேன்” என்றார். இருவரில் யார் முதலில் கண்ணீர் சிந்தினார்கள் என்பது இருவருக்குமே நினைவில்லை.





# பேத்திக்குப் பிடிக்கும்!

மார்க்கெட்டில் காய்கறியும் மளிகையும் வாங்கிக்கொண்டிருந்த மூதாட்டி ஒருவர், ஒரு சிறிய ஜவுளிக்கடையின் வாசலில் தொங்கவிட்டிருந்த உடையைப் பார்த்ததும் அப்படியே நின்றுவிட்டார். அருகில் போய் ஆசையுடன் அதைப் பார்த்தார். கடைக்காரரிடம் அதன் விலையை விசாரித்தார். “500 ரூபாய்மா” என்றார் கடைக்காரர்.

மூதாட்டி தயக்கத்துடன், “இந்த டிரஸ் என் பேத்திக்குப் பிடிக்கும். என்கிட்ட இப்ப பணம் இல்ல. வேலைக்குப் போனா ரெண்டு வாரத்துல எப்படியும் சம்பாதிச்சுடுவேன். அதுவரைக்கும் இந்த டிரஸ்ஸை யாருக்கும் விக்காம தனியா வச்சிருப்பீங்களா?” என்று கேட்டார். “அப்படி வைக்க முடியாதேம்மா! கடைக்கு வர்றவங்க எல்லாத்தையும் பார்ப்பாங்க, அவங்க ஆசைப்பட்டுக் கேட்டா கொடுத்துதானே ஆகணும்” என்றார் கடைக்காரர்.

மூதாட்டி ஏமாற்றத்துடன் அந்த உடையைப் பார்த்தபடி போனார். அடுத்து காய்கறிக் கடையில் அவர் பேரம் பேசி காய்கறிகளை வாங்கி முடித்துப் பணத்தை எண்ணிக் கொடுத்துவிட்டுப் பையை எடுத்தபோது, அந்தப் பையின் மேலே ஒரு பார்சல் இருந்தது. திறந்து பார்த்தால், அவர் தன் பேத்திக்காக வாங்க நினைத்த உடை. நெரிசலான மார்க்கெட்டில் யார் இதை வாங்கி வந்து தன் பையில் வைத்திருப்பார்கள் என்று சுற்றும் முற்றும் பார்த்தார் மூதாட்டி. யாரென்று கண்டுபிடிக்க முடியவில்லை. முகம் தெரியாத அந்தக் ‘கடவுளை’ நன்றியுடன் வணங்கினார் மூதாட்டி.

வாட்ஸ்அப் மூலம் இப்போதும் உலகம் முழுக்க சுற்றிக்கொண்டிருக்கும் ஒரு வீடியோவை நீங்களும் பார்த்திருக்கக்கூடும். ‘அன்பின் முதல்புள்ளியாகக் குழந்தைகளே எப்போதும் இருக்கிறார்கள்’ என்பதை உணர்த்தும் காட்சி அது. அதில் உரையாடல்களே கிடையாது. அன்பின் வெளிப்பாடு உலகில் எந்த மொழி பேசுகிறவருக்கும் புரிந்துவிடும் அல்லவா? அப்படியானதுதான் அது!

மருந்துக்கடை ஒன்றில் மருந்துகள் வாங்க நின்றிருக்கிறார் ஒரு முதியவர். மருந்துச்சீட்டைப் பார்த்து ஏராளமான மருந்துகளை எடுத்து வைக்கிறான் கடை இளைஞன். அந்த மருந்துகள் எல்லாமே அத்தியாவசியம் என்பது அந்த முதியவரின் முகத்தைப் பார்த்தாலே புரிகிறது. கடைசியில் விலையைக் கூட்டிப் பார்க்கிறபோது, அதில் பாதி தொகை மட்டுமே முதியவரிடம் இருக்கிறது. அமைதியாக அதைக் கடைப் பையனிடம் கொடுத்துவிட்டு, தன் விரலில் இருக்கும் மோதிரத்தையும் கழற்றிக் கொடுத்துவிட்டு அவனைக் கைக்கூப்பி வணங்குகிறார் முதியவர்.

கடையில் நிற்கும் ஒரு சிறுவன் இதைக் கவனிக்கிறான். சாக்லேட் வாங்குவதற்காகச் சற்றுமுன் தன் அம்மாவிடம் 50 ரூபாய் வாங்கியிருந்தான் அவன். முதியவரின் முகத்தைப் பார்த்து எதையோ புரிந்துகொள்ளும் அவன், தன் 50 ரூபாயை அவரது மருந்துகளுக்கான தொகையாக வைக்கிறான். முதியவர் திகைக்கிறார். சிறுவனின் அம்மாவும் இதைப் பார்த்துவிட்டுத் தன் பங்காக 500 ரூபாய் வைக்கிறார். முதியவரின் பின்னால் நிற்கும் ஒருவர் இரண்டாயிரம் ரூபாய் வைக்கிறார். அப்படியும் குறைகிறது. கடைப்பையன் இதையெல்லாம் பார்த்து, பாக்கெட்டிலிருந்து தன் சம்பளப் பணத்தில் ஆயிரம் ரூபாய் எடுத்து டேபிளில் வைக்கிறான். அதைப் பார்த்துவிட்டுக் கடை முதலாளி வருகிறார். மீதிப் பணம் வேண்டாம் என்று சொல்லிவிட்டு, மருந்துகளை முதியவரிடம் கொடுத்து, மோதிரத்தையும் அவர் கையில் போட்டு விடுகிறார்.



# அன்பைப் பரப்புவோம்!

இந்த உலகில் மனிதம் தழைத்திருக்கிறது என்பதை உணர்த்துபவை இதுபோன்ற தன்னலமற்ற உதவிகள்தான். இன்னொரு மருந்துக்கடை உரிமையாளரின் கதை இது. திடீரென அவர் உடல்நலமின்றி இறந்துவிட்டார். மகனும் மகளும் அப்போதுதான் கல்லூரி படித்தனர். குடும்பம் அவர் இல்லாமல் தடுமாறுமோ என்ற பயம் அவர் மனைவிக்கு ஏற்பட்டது. காரணம், அவருக்கு மருந்துக்கடையை நடத்திப் பழக்கம் இல்லை. நெருக்கமான உறவுகள் என்றும் யாருமில்லை.

அதே நகரில் மருந்துக்கடை வைத்திருக்கும் இன்னொருவர் உதவிக்கு வந்தார். "வியாபாரத்தில் நிறைய பணத்தை இழந்து தவித்த எனக்குக் கடை வைத்துக் கொடுத்து என்னை ஆளாக்கியதே அவர்தான். அவர் கடையை நான் ஆள் வைத்துக் கவனித்துக்கொள்கிறேன். வரும் லாபத்தை உங்களுக்கு அப்படியே தருகிறேன். பிள்ளைகள் யாராவது படிப்பை முடித்து வந்து கடையைக் கவனிக்கும் ஆசை இருந்தால், அப்போது அவர்களுக்குத் தொழிலும் சொல்லித் தருகிறேன்" என்றார்.

அது மட்டுமில்லை... திடீர் திடீரென வீட்டுக்கு யாரோ வருவார்கள். அவர்கள் யாரென்றே குடும்பத்தில் யாருக்கும் தெரியாது. அந்த மருந்துக் கடைக்காரர் பற்றி நெகிழ்ச்சியான ஏதாவது ஒரு சம்பவத்தைச் சொல்வார்கள். "என் மனைவியை உயிருக்கு ஆபத்தான நிலைமையில ஆஸ்பத்திரியில சேர்த்தேன். வெளியூர்ல இருந்து ஒரு மருந்து அவசரமா வேணும்னு இருந்தப்ப, அவர்தான் யார்கிட்டயோ சொல்லி அதை வாங்கிக் கொடுத்துக் காப்பாத்தினார். அதுக்குக் காசு கூட வாங்கல. அவர் குடும்பம், அவர் இல்லாம தவிச்சுடக் கூடாது" என்று ஒரு விவசாயி வந்து மூட்டை நிறைய அரிசியும் பருப்பும் உளுந்தும் கொடுத்துவிட்டுப் போனார். "எங்க வயல்ல என்ன விளைஞ்சாலும், அதுல ஒரு பங்கு உங்க குடும்பத்துக்கு வந்துடும்" என்று சொல்லிவிட்டுப் போனார்.

'அரிதான ஒரு மருந்தை வெளிநாட்டிலிருந்து உரிய நேரத்தில் வரவழைத்துக் கொடுத்து என் மகளைக் காப்பாற்றினார்' என்று வந்து நெகிழ்ந்த ஒரு பணக்காரர், மூத்த மகனின் உயர்கல்விச் செலவை, தான் ஏற்றுக்கொள்வதாகச் சொன்னார். ஒரு நண்பர் வந்து, "நான் வாங்கிய மருந்துகளுக்கு அவர் எப்போதும் பணமே பெற்றுக்கொண்டதில்லை" என்று நினைவுகூர்ந்தார். 'எதிர்காலத்தில் மகளின் திருமணத்துக்கு உதவும்' என்று சொல்லி நகை ஒன்றைக் கொடுத்துவிட்டுப் போனார்.

அந்தக் குடும்பம் நிஜமாகவே இதையெல்லாம் எதிர்பார்க்கவில்லை. மருந்துக் கடைக்காரர் இறந்து ஆறு மாதங்கள் கடந்தும், இப்படி யாரோ ஒருவர் இனிமையான நினைவுகளுடன் வந்து பேசிவிட்டுப் போவது நிற்கவில்லை. தங்கள் தந்தை மீது பிள்ளைகளுக்குப் பெரும் மதிப்பு



ஏற்பட்டது. ஒரு கட்டத்தில் மகன் அம்மாவிடம் வந்தான். "அம்மா, நான் படித்துக்கொண்டே பகுதிநேரமாக அப்பாவின் கடையைப் பார்த்துக்கொள்கிறேன். அப்பா நடத்தியது போலவே கடையை நடத்த விரும்புகிறேன்" என்றான்.

இதேபோன்ற நினைவுகள் இன்னொரு குடும்பத்துக்கும் கிடைத்தன. ஒரு வழக்கறிஞர் வெற்றிகரமாகத் தொழில் செய்து வந்தார். விவாகரத்து வழக்குகளை நடத்துவதில் திறமையானவர் என்று பெயரெடுத்தார். அவர் ஒரு வழக்கை எடுத்து நடத்தினால், அதில் கண்டிப்பாக விவாகரத்து கிடைத்துவிடும். அதனால் பணம் குவிந்தது, வசதிகள் வந்து சேர்ந்தன.

அவர் விவாகரத்து வழக்கு நடத்திப் பிரித்துவைத்த பெண் ஒருவர் ஒருநாள் கண்ணீருடன் வந்து வழக்கறிஞரைச் சந்தித்தார். "ஏதோ ஒரு வேகத்துல நான் பிரிவுக்கு அன்னைக்கு ஒத்துக்கிட்டேன். ஆனால், அது எவ்வளவு தப்புன்னு இப்பதான் புரியுது. என் அப்பா, அம்மாவும் என்னை வார்த்தைகளால நோகடிச்சதால தனியா வந்துட்டேன். வீட்டுல தனியா இருக்க பயமா இருக்கு. என் மகள் பாதி நாள் என்னோடவும் பாதி நாள் அப்பாவோடவும் இருக்கா. அவளால முன்னாடி மாதிரிப் படிக்க முடியல. அவளை நினைச்சுக் கவலையா இருக்கு. இதையெல்லாம் முன்னாடியே சொல்லி எனக்கு நீங்க அட்வைஸ் பண்ணியிருந்தா, நான் விவாகரத்துக் கேட்டிருக்கவே மாட்டேன்" என்றார்.

அந்த நாளில் அவர் மாறினார். குடும்பங்களைப் பிரிப்பதை இனி செய்வதில்லை என்று முடிவெடுத்தார். இதற்குப் பிராயச்சித்தமாக, குடும்பங்களைச் சேர்த்து வைக்க முடிவெடுத்தார். யாரெல்லாம் குழந்தைகளைத் தத்தெடுக்க விரும்புகிறார்களோ, அவர்களுக்காக வழக்கு நடத்தினார். நிறைய குழந்தைகளுக்கு அம்மாவும் அப்பாவும் கிடைத்தார்கள். வருமானம் குறைந்தாலும் அவர் கவலைப்படவில்லை.

முதுமையில் அவர் இறந்தபோது அவருக்கு அஞ்சலி செலுத்த வந்த கூட்டத்தைப் பார்த்து ஊரே மிரண்டுவிட்டது. அம்மாக்களும் அப்பாக்களும் பிள்ளைகளும் குடும்பம் குடும்பமாக வந்து கண்ணீர் சிந்தினார்கள். அன்பைப் பகிர்கிறவர்களுக்கு அது ஏராளமாகத் திரும்பக் கிடைக்கும் என்பதற்குச் சாட்சி அது. ●

# கொடுப்பதால் கிடைக்கும் சக்தி !



அனுதாபம் காட்டுவது என்பது வேறு, அன்புடன் ஒருவருக்காக எதையும் கொடுக்கத் தயாராக இருப்பது என்பது வேறு. சொல்லுக்கும் செயலுக்குமான வித்தியாசம் அது. ஒருவர் பிரச்னையில் இருக்கிறார் அல்லது துயரத்தில் தவிக்கிறார் என்று தெரிந்தால், 'அடப் பாவமே!' என்று உதட்டளவில் ஆறுதல் சொல்லிவிட்டு நகர்வது அனுதாபம். 'என் தோள்களில் சாய்ந்துகொள்! இந்தத் துயரத்தை இணைந்து எதிர்கொள்ளலாம்' என்பது அன்பு.

'உனக்கு என்ன உதவி வேண்டுமானாலும் கேள்' என்பது அனுதாபம். 'உனக்கு உதவி செய்யவே நான் வந்திருக்கிறேன்' என்று கூடப்போய் நின்று உதவி செய்வது அன்பு. 'உன் சுமையை நினைத்தால் கவலையாக இருக்கிறது' என்று சொல்வது அனுதாபம். 'உன் சுமையை என்னிடம் பகிர்ந்துகொள், அது குறைந்துவிடும்' என்று சொல்வது அன்பு. வெறும் அனுதாபத்தைக் கடந்து நெருங்கி அன்பு காட்டுவது ஒருவரின் வாழ்வை எப்படி மாற்றும் என்பதற்கு உதாரணம் இந்தச் சம்பவம்...

சுரேஷ் ஒருநாள் பள்ளி முடிந்து வீட்டுக்கு நடந்து போகும்போது, தனக்கு முன்னால் சென்ற ஒரு மாணவன் தடுமாறிக் கீழே விழுந்ததைக் கவனித்தான். மற்ற மாணவர்கள், "டேய், பார்த்து வரக்கூடாதா?" என்று கேட்டுவிட்டுக் கடந்து போனார்களே தவிர, யாரும் அவனுக்கு உதவி செய்யவில்லை.

சுரேஷ் ஓடிப் போய் அவனைத் தூக்கினான். அந்த மாணவன் முதுகில் பள்ளிக்கூடப் பை, கை நிறைய நோட்டுகள், கிரிக்கெட் பேட், பந்து, கிரிக்கெட் விளையாடும் கையுறைகள் என்று ஏராளமான பொருட்களைச் சுமக்க முடியாமல் சுமந்துவந்து தவறி விழுந்திருக்கிறான் என்பது தெரிந்தது.

சுரேஷ் அவன் கை, கால்களை ஆராய்ந்தான். ''நல்லவேளை, எங்கேயும் காயம் ஆகலை'' என்று சொல்லிவிட்டு, கீழே சிதறிக் கிடந்த எல்லாவற்றையும் எடுத்தான். "நீ எந்தப் பக்கம் போறே?'' என்று அவனிடம் விசாரித்தான். அவனும் சொன்னான். "சரி, நான் வீட்டுக்குப் போற வழிதான் அது. இவ்வளவையும் உன்னால தூக்கிட்டு வர முடியாது. நான் பாதி எடுத்துட்டு வந்து வீட்டுல கொடுக்கிறேன்" என்று சொல்லித் தானும் சுமைகளைப் பகிர்ந்துகொண்டான். அந்த மாணவனின் பெயர் ஜீவா என்று தெரிந்துகொண்டான் சுரேஷ். சுரேஷைவிட ஒரு வயது சிறியவன். எட்டாம் வகுப்பு படிக்கிறான்.

ஜீவாவின் வீடு பெரிதாக இருந்தது. உள்ளே போய் எல்லாப் பொருட்களையும் வைத்தான் சுரேஷ்.



ஜீவா ஃபிரிட்ஜிலிருந்து குளிர்பானம் எடுத்துவந்து சுரேஷுக்குக் கொடுத்தான். இருவரும் நீண்ட நேரம் சிரித்தபடிப் பேசினார்கள். பாடம், ஆசிரியர்கள், கிரிக்கெட், சினிமா என்று ஏதேதோ பேசிவிட்டு சுரேஷ் கிளம்பினான். "லீவ் நாள்ல என் வீட்டுக்கு வா" என்று அழைப்பும் விடுத்தான்.

அடுத்த நாள் உணவு இடைவேளையில் இருவரும் சேர்ந்து சாப்பிட்டார்கள். மாலையில் சேர்ந்தே வீடு திரும்பினார்கள். கொஞ்ச நாளிலேயே நெருக்கமான நண்பர்கள் ஆகிவிட்டார்கள்.

சுரேஷ் பிளஸ் 2 முடித்து வெளியூர் கல்லூரியில் சேர இருந்தான். "இன்னும் ஒரு வருஷம் நான் இல்லாம நீ ஸ்கூலுக்குப் போகணும் இல்ல ஜீவா?" என்று சுரேஷ் கேட்டதும், "ஆமா, உன்னை மிஸ் பண்ணுவேன்" என்று ஜீவா அழுதான். "டேய், அழாதே!" என்று சுரேஷ் பதறினான்.

"உனக்கு ஒரு விஷயம் தெரியாது சுரேஷ், நாம முதன்முதல்ல சந்திச்ச அந்த நாள் ஞாபகம் இருக்கா? அன்றைக்கு நான் ஏன் அவ்ளோ பொருளைச் சுமந்துக்கிட்டு வந்தேன்னு நீ கேட்கலை. நிஜம் என்ன தெரியுமா? அன்னைக்கு நான் செத்துப் போகலாம்னு முடிவு பண்ணியிருந்தேன்" என்று கலங்கினான் ஜீவா. "என்னடா சொல்றே?" என்று சுரேஷ் நெருங்கி வந்து அவன் கண்களைத் துடைத்துவிட்டான்.

"ஆமா சுரேஷ். அந்த நாட்கள்ல வீட்டுல அம்மாவும் அப்பாவும் சண்டை போட்டுப்பாங்க. சண்டை வந்தா ரெண்டு பேருமே என்னைத்தான் திட்டுவாங்க, அடிப்பாங்க. இதனால சரியா படிக்க முடியாம ஸ்கூல்லயும் திட்டு வாங்குவேன். எனக்காக யாருமே இல்லைன்னு தோணுச்சு. அதனால, தற்கொலை பண்ணிக்கலாம்னு முடிவு பண்ணி, அம்மாவோட தூக்க மாத்திரைகளை ரகசியமா எடுத்துச் சேர்த்து வச்சேன். ஸ்கூல்ல இருந்த என் பொருட்கள் எல்லாத்தையும் எடுத்துவந்து வீட்ல வச்சிட்டுச் செத்துப் போலாம்னுதான் அன்றைக்கு எல்லாத்தையும் எடுத்து வந்தேன். விழுந்தேன். திடீர்னு நீ வந்தே! நீ ஹெல்ப் பண்ணினதும், என்கூட வீட்ல அவ்வளவு நேரம் பேசினதும் என் மனசை மாத்திடுச்சு. அதன்பிறகு உன் அக்கறைதான் என்னை நல்லா படிக்க வச்சது. நான் நல்லா படிச்சதும், அன்பா இருந்ததும், என் வீட்டையே மாத்துச்சு. நீ என் உயிரையே காப்பாத்தி இருக்கேன்னு உனக்குத் தெரியாது, ஆனா எனக்கு மட்டும்தான் தெரியும். தேங்க்ஸ்டா"என்று சுரேஷைக் கட்டிக்கொண்டான் ஜீவா.

அன்பு காட்டும்போது நாம் இன்னொருவரின் வாழ்வில் எப்படிப்பட்ட மாற்றங்களை ஏற்படுத்துகிறோம் என்பது நமக்கே தெரியாது.

- இதயம் திறந்து அடுத்தவர்களிடம் பேசுங்கள். அன்புக்காக எவரையும் ஏங்க வைக்காதீர்கள்.
- அறிமுகம் இல்லாத மனிதர்களுக்கும் உங்களால் முடிந்த உதவிகளைச் செய்யுங்கள்.
- நண்பர்களிடமும் உறவுகளிடமும் அதிக இடைவெளி காட்டாதீர்கள். அவர்களுக்குத் தேவைப்படும் நேரத்தில் அருகில் இருங்கள்.
- அடுத்தவர்களை ஊக்கப்படுத்தவும் பாராட்டவும் தயங்காதீர்கள். தேவைப்படும் எவருக்கும் வழிகாட்டுங்கள்.
- ஒருவருக்கு உதவி செய்வதற்காக இன்னொருவரிடம் உதவி கேட்கவும் தயங்காதீர்கள். அடுத்தவருக்காக எனும்போது, கூச்சப்படாமல் உதவி கேட்க முடியும். ●


RAMRAJ காட்டன்

# வெண்மை

**VENMAII**

தமிழ் மாத இதழ்

மலர் 9 இதழ் 3

செப்டம்பர் 2024

பதிப்பாளர் - கௌரவ ஆசிரியர்

**கே.ஆர்.நாகராஜன்**

ஆசிரியர்

**த.செ.ஞானவேல்**

இதழாசிரியர்

**வள்ளி**

வடிவமைப்பு

**உதயா**

புத்தக ஆக்கமும் வடிவமைப்பும்:
தரு மீடியா (பி) லிட்.,
10/55, ராஜ் தெரு,
மேற்கு மாம்பலம்,
சென்னை - 600 033
email: contacttharu@gmail.com



இந்தப் புத்தகத்தின் எந்த ஒரு பகுதியையும் பதிப்பாளரின் எழுத்துப்பூர்வமான முன் அனுமதி பெறாமல் மறுபிரசுரம் செய்வதோ, அச்சு மற்றும் மின்னணு ஊடகங்களில் மறுபதிப்பு செய்வதோ காப்புரிமைச் சட்டப்படி தடை செய்யப்பட்டதாகும்.



Published by
K.R. NAGARAJAN,
Published from
10, Sengunthapuram
Mangalam Road,
TIRUPUR - 641 604.
Ph: 9842274137

# மறக்கக்கூடாத கொடைகள்!



‘பிறருக்குக் கொடுத்ததை ஞாபகத்தில் வைத்திருக்காதீர்கள். ஆனால், பிறரிடம் பெறுவதை எப்போதும் மறக்காதீர்கள்’ என்று ஒரு பொன்மொழி உண்டு. இயல்பாக நமக்குக் கிடைத்திருக்கும் பல கொடைகளின் அருமையை நிறைய பேர் உணர்வதில்லை.


- காலையில் பல் துலக்கியதும் சூடாக காபி, டீ, பால் கிடைக்கிறதா? காலையில் சாப்பிட உணவு இருக்கிறதா? நிறைய பேருக்கு இந்த அதிர்ஷ்டம் இல்லை.
- உங்களுக்குச் செய்வதற்கு ஒரு வேலை இருக்கிறதா? நாட்டில் நிறைய பேர் ஏதோ ஒரு வேலைவாய்ப்புத் தேடி அலைந்தபடி இருக்கிறார்கள்.
- உங்களுக்கு அன்பான ஒரு குடும்பம் இருக்கிறதா? சிலருக்கு இப்படிக் குடும்பமோ, அன்பு செலுத்தும் உறவுகளோ வாய்க்கவில்லை.
- தேவையான அடிப்படை வசதிகளுடன் ஒரு வீடு உங்களுக்கு இருக்கிறதா? வசிப்பிடம் இல்லாமல் இங்கு நிறைய பேர் வீதியில் தவிக்கிறார்கள்.
- உடுத்துவதற்கு உடை, அணிவதற்குச் செருப்பு என்று உங்கள் தோற்றத்தை மேம்படுத்த எல்லாமே கிடைக்கிறதா? பலருக்கு அவை கிடைப்பதில்லை. சிலருக்கோ, செருப்பு அணிவதற்குக் கால்களே இல்லை.
- நன்கு பார்க்கவும் படிக்கவும் பேசவும் உங்களால் முடிகிறதா? கை, கால்களை அசைத்து நடக்கவும் ஓடவும் முடிகிறதா? இந்த ஆரோக்கியமும் பலருக்கு இங்கு கிடைக்கவில்லை.
- உடல்நிலை சரியில்லை என்றால் உடனே மருத்துவமனைக்குச் சென்று சிகிச்சை எடுத்துக்கொண்டு நலம்பெறும் அளவுக்கு வசதிகள் உங்களுக்குக் கிடைக்கிறதா? உலகின் நிறைய நாடுகளில் இதுகூடக் கிடைக்கவில்லை.
- நண்பர்களுடனும் உறவுகளுடனும் சிரித்துப் பேசவும், பொழுதுபோக்குகளுக்கும் வாய்ப்பு இருக்கிறதா? பலருக்கு இவையெல்லாம் வாய்ப்பதில்லை.
- சுத்தமான தண்ணீர், மின்சார வசதி, பாதுகாப்பான சூழல் என்று எல்லாமே உங்களுக்குக் கிடைக்கிறதா? போர்க்களமாகத் திகழும் நாடுகளில் பிறந்தவர்களுக்கு எத்தனை கோடிகள் கொடுத்தாலும் கிடைக்காத வசதிகள் இவை.
- போக்குவரத்து வசதிகள், செல்போன் மற்றும் இன்டர்நெட் எனத் தொலைத்தொடர்பு வசதிகள் உங்களுக்கு வாய்த்துள்ளனவா? மலைப்பிரதேசங்களிலும் கிராமங்களிலும் பலருக்கு இவை இன்னும் கிடைக்கவில்லை.
- மனதில் நினைப்பதைத் துணிச்சலாக வெளிப்படுத்தும் சுதந்திரம் இருக்கிறதா? நீங்கள் நினைத்தபடி வாழ்வதற்கான வாய்ப்புக் கிடைக்கிறதா? உலகில் பல கோடி மக்களுக்கு இதெல்லாம் கிடைக்கவில்லை.
- தினமும் காலையில் எழுந்ததும், இன்று செய்ய வேண்டிய வேலைகள் குறித்து யோசிக்கிறீர்களா? பலருக்குச் செய்ய வேலை இல்லை. இன்னும் சிலரோ, இன்று அதிகாலை எழ முடியாமலே மறைந்துவிட்டார்கள்.

இப்படி இந்தப் பட்டியல் பெரிதாக நீளும். நேர்மறையாக நாம் இந்த வாழ்க்கையைப் பார்த்தால், நன்றி சொல்லவேண்டிய விஷயங்கள் என்று ஒரு பெரிய பட்டியலே இருக்கும். நம் தேடல் பெரிதாக இருக்கலாம். ஆனால், நமக்குக் கொடையாகக் கிடைத்த எல்லாவற்றுக்கும் நன்றியுடன் இருந்தபடி தேடலில் ஈடுபடுவோம். ●




Shop Online @ www.ramrajcotton.in


RAMRAJ
PRESTIGE WHITE FABRICS
SCAN QR CODE FOR
STORE LOCATION




Available @ Ramraj Showrooms & All leading textile shops | Shop online @ www.ramrajcotton.in





Shop Online @ www.ramrajcotton.in

உங்கள் வீட்டுக்கே வர வேண்டுமா?

# வெண்மை

## சந்தாதாரர் ஆகுங்கள்!



'உயர்ந்த எண்ணங்கள் உலகம் முழுவதும் சென்றடைய வேண்டும்' என்ற உயரிய நோக்கில் மதிப்புமிக்க படைப்புகளைத் தொடர்ந்து வெளியிட்டு வருகிறது வெண்மை. இந்த மாத இதழ் ஒவ்வொரு குடும்பத்திலும் பாதுகாக்கப்படும் பொக்கிஷமாகத் திகழ்கிறது.

**ஓர் ஆண்டு சந்தா ரூ.200**

**இரண்டு ஆண்டுகள் சந்தா ரூ.380**

காசோலை/வரைவோலை மூலம் அனுப்பலாம். **VENMAII** என்ற பெயரில் செக்/டி.டி. அனுப்பவும். பின்புறம் உங்கள் பெயர், ஊர் எழுதவும்.

அல்லது

VENMAII என்ற வங்கிக் கணக்கில் (A/C No:1809135000000299 Karur Vysya Bank, Tirupur SR Nagar Branch - IFSC: KVBL0001809) பணம் செலுத்தி, அதன் ஒப்புகை பிரதியை படிவத்துடன் அனுப்பி வைக்கலாம்.

➲ மணியார்டர்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

➲ அனைத்து ராம்ராஜ் ஷோரூம்களிலும் சந்தா செலுத்தலாம்.


**வெண்மை**

ராம்ராஜ் வி டவர்,

10, செங்குந்தபுரம், மங்கலம் ரோடு,

திருப்பூர் - 641 604.

email: venmaii@ramrajcotton.net


சந்தா செலுத்தவும், மொத்தமாக வெண்மை இதழ்களைப் பெறவும் தொடர்புகொள்ளுங்கள்.

போன்:

0421–4304106, 98422 74137

## ஒரே நிமிடத்தில் வெண்மை சந்தாதாரர் ஆகலாம்!

உங்கள் சந்தாவை PhonePe G Pay Net transfer மூலம் செலுத்துங்கள்.

UPI பரிவர்த்தனை மூலமும் மொபைல் போன் மூலம் வெண்மை வங்கிக் கணக்கில் சந்தா தொகையை செலுத்தலாம். வெண்மை UPI id: kvbupiqr.75626@kvb

Bharat QR code வசதியுள்ள மொபைல் பேங்கிங் ஆப் வைத்துள்ளவர்கள், அதில் இங்கே உள்ள வெண்மை வங்கிக் கணக்கின் QR code –ஐ ஸ்கேன் செய்து சந்தா செலுத்தலாம்.

பணம் செலுத்தப்பட்டதற்கான வங்கித் தகவலை Forward செய்யுங்கள். கூடவே உங்கள் முழு முகவரியையும் அலைபேசி எண்ணுடன் வாட்ஸ்அப் செய்யுங்கள். அலைபேசி எண்: 98422 74137.

**வங்கிக் கணக்கு விவரம்: Venmaii**
**A/C No: 1809135000000299**
**Karur Vysya Bank,Tirupur SR Nagar Branch**
**IFSC Code: KVBL0001809.**



## மாணவ/ மாணவியர் சிறப்பு சலுகை

**(6ம் வகுப்புக்கு மேல் படிக்கும் மாணவர்களுக்கு இந்த சலுகை பொருந்தும். சந்தா செலுத்தும்போது, மாணவர் அடையாள அட்டை நகலை இணைத்து அனுப்பவும்.)**

| ஒரு வருட சந்தா: | 2 வருட சந்தா: |
| --- | --- |
| ரூ.~~200~~ ரூ.125 மட்டும். | ரூ.~~380~~ ரூ.250 மட்டும். |



## சீனியர் சிட்டிசன் சிறப்புச் சலுகை

**(60 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு இந்த சலுகை பொருந்தும். பிறந்த தேதிக்கான ஆதாரச் சான்று நகலை இணைத்து அனுப்ப வேண்டும்.)**

| ஒரு வருட சந்தா: | 2 வருட சந்தா: |
| --- | --- |
| ரூ.~~200~~ ரூ.125 மட்டும். | ரூ.~~380~~ ரூ.250 மட்டும். |

ராம்ராஜ் ஷோரூம்களில் ரூ.10,000க்கு மேல் பொருட்கள் வாங்குபவர்களுக்கு

**ஒரு வருட சந்தா பரிசாக வழங்கப்படும்**

## “நாங்களும் கொடுப்போம்!”

ஒன்பது வயது சிறுமி மார்லி பேக். அவளுக்கு அரிய வகை புற்றுநோய் இருப்பது கண்டறியப்பட்டது. அதற்காக அவளுக்கு கீமோதெரபி சிகிச்சை தரப்பட்டதால், தலையில் முடி முழுக்கக் கொட்டி மொட்டைத்தலை ஆகிவிட்டது. சிகிச்சை முடிந்து பள்ளி செல்ல வேண்டிய நாள் வந்தபோது அவள் மிகவும் கவலைப்பட்டாள். தலையில் முடியே இல்லாமல் பள்ளியில் சக மாணவ,மாணவிகளின் கிண்டலுக்கு ஆளாக வேண்டியிருக்குமோ என்று பயம்.

ஆனால், பள்ளியில் அவளை வரவேற்ற தோழி கேமரூன் தன் தலையில் முடியே இல்லாமல் இருந்தாள். தன் தோழிக்காக அவள் தலையை மொட்டை அடித்துக்கொண்டாள். அதன்பின் அந்தப் பள்ளியின் 80 மாணவ, மாணவிகளும் சில ஆசிரியர்களும் மார்லிக்கு தாழ்வு மனப்பான்மை வரக்கூடாது என்பதற்காக மொட்டை அடித்துக்கொண்டனர். அதை ஒரு நிகழ்ச்சியாகவே நடத்தி, சுமார் 20 லட்சம் ரூபாய் நிதி வசூலித்துப் புற்றுநோய் சிகிச்சைக்காக வழங்கினர்.







## “அச்சமில்லை என்றால் வாருங்கள்!”

வேலை விஷயமாக வெளியூர் போய்விட்டு ரயிலில் ஊர் திரும்பினாள் நித்யா. அதிகாலை 3 மணிக்கு அவள் ஊருக்கு ரயில் வரும். பகலில் வரும் ரயிலில் டிக்கெட் கிடைக்கவில்லை என்பதால் இப்படிப் பயணம். செல்போனில் அலாரம் வைத்துவிட்டுத் தூங்கினாலும், சார்ஜ் தீர்ந்துபோய் செல்போன் ஆஃப் ஆகியிருந்தது. திடுக்கிட்டுத் தாமதமாக விழித்தவள், அடுத்த ஸ்டேஷனில்தான் இறங்க முடிந்தது.

‘அப்பா அந்த ஸ்டேஷனில் காத்திருப்பார், தன்னைக் காணாமல் பரிதவிப்பார்’ என்று கலங்கினாள். துரதிர்ஷ்டவசமாக அந்தச் சிறிய ஸ்டேஷனில் அந்த அகால நேரத்தில் பயணிகள் யாருமே இல்லை. டாக்சி புக் செய்யவும் அவள் போனில் சார்ஜ் இல்லை. வெளியில் ஆட்டோக்களும் இல்லை. வாசலில் ஒரே ஒரு கார் நின்றது. அந்தக் காரில் இருந்த நடுத்தர வயது மனிதர் இவள் பரிதவிப்பதைப் பார்த்து வந்து விசாரித்தார். ‘கடத்தல் கும்பலோ, சைக்கோ கொலைகாரரோ’ என்றெல்லாம் அவள் சந்தேகமும் குழப்பமுமாக அவரிடம் பேசத் தடுமாறினாள். வேறு வழியின்றி, நடந்ததைச் சொன்னாள்.



தன் போனை அவளிடம் கொடுத்த அந்த மனிதர், “பயப்படாதீங்க, நான் என் மனைவியை ரயில் ஏத்த வந்தேன். உங்க அப்பா நிக்கற ஸ்டேஷன் இங்கிருந்து 10 கிலோமீட்டர்தான். கால் மணி நேரத்துல போயிடலாம். உங்களுக்குப் பயமா இருந்தால், போன்ல உங்க அப்பாகிட்ட பேசிக்கிட்டே வாங்க. நான் கூட்டிப் போய் விட்டுடறேன்” என்று அவளைக் கூட்டிப் போய் அப்பாவிடம் சேர்த்தார். “பத்திரமா வீட்டுக்குப் போங்க” என்றவர், அடுத்த நொடியே கிளம்பிப் போய்விட்டார்.



## “இது அவர் கொடுத்த வாழ்க்கை!”

தன் தாத்தாவைப் பார்க்க எப்போதாவது ஓர் இளைஞர் வருவதை பிரியா கவனித்தாள். அப்பாவுக்கும் அம்மாவுக்கும் அவரை நன்கு தெரிந்திருந்தது. வரும்போதெல்லாம் அவர்களுக்கும் குழந்தைகளுக்கும் என்று ஏதாவது வாங்கி வருவார். தாத்தாவிடம் நீண்ட நேரம் பேசிவிட்டுச் செல்வார். ‘தாத்தாவுக்கு இந்த வயதில் ஒரு நண்பர் இருக்கிறாரே’ என்று பிரியா கிண்டல் செய்தாள். பிறகுதான் அவளுக்குத் தெரிந்தது உண்மை!

தாத்தா ரயில் எஞ்சின் டிரைவராகப் பணி செய்தவர். ஒருநாள் ரயில் முன் பாய்ந்து தற்கொலை செய்துகொள்ள முயன்ற அந்த இளைஞரைக் காப்பாற்றியிருக்கிறார். தேர்வுத் தோல்வியால் விரக்தியில் இருந்த அவரைத் தேற்றி, ஒரு நாள் முழுக்கப் பேசி நம்பிக்கை கொடுத்திருக்கிறார். அதன்பின் அவர் நன்கு படித்து, ஒரு நல்ல வேலையில் சேர்ந்து, இன்று வாழ்க்கையில் முன்னுக்கு வந்திருக்கிறார். “இது அவர் கொடுத்த வாழ்க்கை” என்று தாத்தாவை அடிக்கடி வந்து பார்த்து தன் நன்றியை வெளிப்படுத்துகிறார். அதன்பின் தாத்தா மீது பிரியாவுக்கு மதிப்பு உயர்ந்தது.



## எத்தனை பேருக்குக் கொடுக்கலாம்!

பேருந்தில் பயணம் செய்துகொண்டிருந்தான் வெங்கடேஷ். அப்போது அதில் ஒலித்த ரேடியோவில் ஒரு பரிசுப் போட்டி அறிவிப்பு வந்தது. ‘ஒரு கோடி ரூபாய் பரிசு’ என்றதும், வெங்கடேஷ் பக்கத்தில் அமர்ந்திருந்த பார்வையற்றவர் சிரித்தார். “ஏன் சிரிக்கிறீர்கள்?” என்றபோது, “கேட்டீர்களா? ஒரு கோடி ரூபாய் பரிசு. அந்தப் பரிசு விழுந்தால், எத்தனை நண்பர்களுக்கு அவர்கள் விரும்பியதை எல்லாம் வாங்கிப் பரிசாகக் கொடுக்கலாம் தெரியுமா? நான் ஆயிரம் பேருக்குக் கொடுப்பேன்” என்றார்.

வெங்கடேஷ் திகைத்துவிட்டான். ‘பரிசு கிடைத்தால் வீடு வாங்குவேன், கார் வாங்குவேன், நகை வாங்குவேன்’ என்று சொல்பவர்களுக்கு மத்தியில் இந்த மனிதர் இப்படிச் சிந்திக்கிறாரே என்று பிரமித்தான். தனக்குப் பார்வை கிடைக்க ஆபரேஷன் செய்துகொள்வேன் என்றுகூடச் சொல்லாமல், நண்பர்கள் பற்றிச் சிந்திக்கிற அவரின் பெருந்தன்மையை நினைத்து வணங்கினான்.

## ஒரே ரத்தம்!

ஐந்து சகோதரர்களுடன் வளர்ந்தாள் அனிதா. நடுத்தர வசதிகள் உள்ள குடும்பம் என்றாலும், அனிதாவுக்கு எது கேட்டாலும் கிடைத்தது. அவர்கள் படித்ததைவிட நல்ல பள்ளியில் படித்தாள். அவர்களைவிட அதிக விலையில் உடைகள் வாங்கிக் கொடுப்பார்கள். எல்லோரும் எங்கு தூங்கினாலும், அவளுக்கு மட்டும் தனி அறை கொடுத்தார்கள். அண்ணன்களுடன் ஏதாவது சின்னதாகச் சண்டை வந்தாலும், பெற்றோர் எப்போதும் அவள் பக்கமே ஆதரவாக நின்றார்கள். “அவளுக்கு விட்டுக் கொடுக்கக்கூடாதா?” என்று அவர்களைக் கடிந்துகொள்வார்கள். அண்ணன்களும் அவளைப் பாசமாகவே நடத்தினார்கள். “ஏன் அவளுக்கு மட்டும் எல்லாம் ஸ்பெஷல்?” என்றுகூடக் கேட்டதில்லை.

கொஞ்சம் வளர்ந்த பிறகு ஒருநாள் உறவினர் ஒருவர் உண்மையைச் சொல்லிவிட்டார், அவள் அந்தக் குடும்பத்துக்குத் தத்தெடுக்கப்பட்டு வந்தவள் என்று! மகள் வேண்டும் என்ற ஆசையில் குழந்தையாக இருந்தபோதே தத்தெடுத்து இருக்கிறார்கள். ஆனாலும் அந்த உண்மை அவளுக்குத் தெரியக்கூடாது என்று வேறு ஊர் மாறி வந்திருக்கிறார்கள். அண்ணன்களுக்குத் தெரியும் என்றாலும், ஒருமுறைகூட யாரும் வித்தியாசமாக நடத்தியதில்லை என்பதை நினைத்து அவள் கண்ணீர் விட்டாள். “எங்கள் குடும்பத்தில் பிறக்கவில்லை என்றாலும், நீ எங்கள் ரத்தம்” என்று சொன்ன அவர்கள், இப்போதுகூட ‘இந்த உண்மை இவளுக்குத் தெரிந்துவிட்டதே’ என்றுதான் வருந்தினார்கள்.



# லட்சுமியின் பாதச்சுவடுகள்!

மாதத்தின் கடைசி நாள். இரவு எட்டு மணி வாக்கில் கடையை மூடும் நேரத்தில் செருப்புக்கடைக்கு வந்தான் ஓர் இளைஞன். திருத்தமான உடை அணிந்து, கால்களில் ஷூ அணிந்து நேர்த்தியாக இருந்தான். ‘‘வாங்க தம்பி, என்ன வேண்டும்?'' என்று கேட்டார் கடைக்காரர்.

‘‘அண்ணா, எங்க அம்மாவுக்குச் செருப்பு வாங்க வந்தேங்கண்ணா. நல்லா உழைக்கிற மாதிரி தரமா கொடுங்க” என்றான் அவன்.

“அம்மா வந்திருக்காங்களா?”

“இல்லண்ணா, அவங்களுக்குத் தெரியாம சர்ப்ரைஸா வாங்கிக் கொடுக்கப் போறேன்!”

“சரி, அம்மாவோட கால் சைஸ் என்ன?”

அவன் தன் பர்ஸைத் திறந்து, அதில் மடித்து வைக்கப்பட்டிருந்த காகிதத்தை எடுத்தான். அதில் தன் அம்மாவின் பாத அளவுகளைத் திருத்தமாக எடுத்து வரைந்திருந்தான்.

‘‘தம்பி, நான் கேட்டது இது இல்லை. செருப்பு அளவுன்னு ஒரு நம்பர் இருக்குமே, அதைச் சொல்லு!”

இளைஞன் சற்றுத் தயங்கினான். பிறகு சொன்னான், ‘‘எங்க அம்மா இதுவரைக்கும் செருப்புப் போட்டதே இல்லைங்கண்ணா. சைஸ் தெரியாது!”

கடைக்காரர் திகைத்துவிட்டார். “என்னப்பா சொல்றே, உங்க அம்மா என்ன செய்யறாங்க?”

“அம்மா ஐந்து வீடுகள்ல வீட்டு வேலை செய்யறாங்க. பாத்திரம் கழுவி, துணி துவைச்சு, சுத்தம் செய்யற வேலை. அதுல கிடைக்கிற பணத்துல என்னை வளர்த்தாங்க, படிக்க வச்சாங்க. நான் வேலைக்குப் போய் இன்னைக்குதான் முதல் மாச சம்பளம் கைக்கு வந்தது. அதான் ஊருக்கு வந்தேன். அம்மாகிட்ட நல்லதா புடவைகூட இல்லை. நாலு புடவை வாங்கியிருக்கேன். செருப்பு இல்லாம கஷ்டப்படறாங்க, அதான் அவங்களுக்கே தெரியாம வாங்கித் தரலாம்னு...” என்றான்.

“உனக்கு எவ்வளவு சம்பளம்?”

“20 ஆயிரம் வருதுண்ணா. ரூம் வாடகை, சாப்பாடு, போக்குவரத்துன்னு மாசம் பத்தாயிரம் போயிடும். மீதியை எடுத்துட்டு வந்தேன். அம்மாவை இனிமே வேலைக்குப் போகவிடாம பார்த்துக்கணும்!” என்றான்.

தன் அம்மாவுக்கு ஆயிரம் ரூபாயில் நல்ல செருப்பு வாங்கினான். ‘‘விலை அதிகமா இருக்கே? பரவாயில்லையா'' என்று விசாரித்தார் கடைக்காரர். ‘‘பரவாயில்லைண்ணா, அம்மா போட்டுப் பார்த்தா சந்தோஷப்படுவாங்க” என்றான்.

பில் போட்டு அதை வாங்கிக்கொண்டு அவன் கிளம்பும்போது கடைக்காரர் மீண்டும் கூப்பிட்டார். இன்னொரு ஜோடி செருப்பை எடுத்துக் கொடுத்தார். “இதையும் உன் அம்மாவுக்குக் கொடு, உன் அண்ணனா நான் இதைக் கொடுத்ததா நினைச்சுக்கோ” என்றார்.

அவன் தயங்கினான், பிறகு வாங்கிக்கொண்டான். “உன் அம்மா பேர் என்ன?” என்று கேட்டார் கடைக்காரர். “லட்சுமி” என்றான் அவன். “உங்க அம்மா பாதத்தை வரைஞ்சு ஒரு பேப்பர் எடுத்து வந்தியே, அதை எனக்குக் கொடுக்கறியா?'' என்றார் கடைக்காரர். அவன் கொடுத்துவிட்டு விடைபெற்றான்.

அதைக் கண்களில் ஒற்றிக்கொண்டவர், எடுத்துப் போய் கடையின் பூஜையறையில் வைத்து, “மகனுக்காக தன் வாழ்க்கையைக் கொடுத்த அதிர்ஷ்ட லட்சுமியின் பாதச்சுவடுகள் இவை. இதை வைத்து வழிபட்டால் நமக்கு வியாபாரம் கொழிக்கும்” என்று தன் மகனிடம் சொன்னார். ●



# தீர்வு தரும் அன்பு!

பெற்றோர் பேச்சைக் கேட்காமல் மரத்தில் ஏறி விழுந்து காயமடைந்தான் ஒரு சிறுவன். அவனை மருத்துவமனையில் சேர்த்துக் குணப்படுத்தினார்கள். உடம்பு சரியாகி வீட்டுக்கு அழைத்துச் செல்லும் நேரத்தில் அப்பாவிடம் சிறுவன் சொன்னான். "அப்பா! இங்கிருக்கும் எல்லோருக்கும் என் மீது எவ்வளவு அன்பு தெரியுமா? டாக்டர்கள், நர்ஸ்கள், அட்டெண்டர்கள் எல்லோரும் என் உடல்நலத்தை அக்கறையோடு விசாரிப்பார்கள். எது கேட்டாலும் கொடுப்பார்கள். படுக்கை விரித்துப் போடுவார்கள். குறித்த நேரத்தில் சாப்பாடு தருவார்கள். ஆனால் நீங்களும் அம்மாவும் என்னைத் திட்டுகிறீர்கள். எனக்கு வீட்டுக்கு வரவே பிடிக்கவில்லை!"

சிறுவன் இப்படி சொல்லிக்கொண்டிருந்தபோது ஒரு அட்டெண்டர் வந்து ஒரு காகிதத்தை அப்பாவிடம் கொடுத்தார். சிறுவன் அதைப் பார்த்து, "இது என்ன?" என்று கேட்டான். அப்பா நிதானமாகச் சொன்னார். "நீ இப்போது அவர்களது அன்பைப் பற்றிச் சொன்னாய் அல்லவா? அந்த அன்புக்கான விலை இது... ஆஸ்பத்திரி பில்!"

இப்படித்தான் அன்பையும் அக்கறையையும் பலர் தவறாகப் புரிந்துகொள்கிறார்கள். புனிதமான நதியை நாடித் தினமும் ஏராளமானோர் வந்து அதில் குளிக்கிறார்கள். இன்னும் சிலரோ அதில் கழிவுகளைக் கலக்கிறார்கள். யார் என்ன செய்தாலும் அதைப் பற்றி நதி கவலைப்படுவதில்லை. எப்போதும் நிற்காமல் அனைவரையும் ஆரத் தழுவிப் புண்ணியத்தைக் கொடையளித்தபடி அது ஓடிக்கொண்டே இருக்கிறது.

பகவான் கிருஷ்ணர் தன் பக்தர்களுக்குக் கொடையளித்த ஒரு கதை இது... பகவானின் பணக்காரப் பக்தர் ஒருவர் இருந்தார். அவருக்குக் காலில் ஏதோ பாதிப்பு ஏற்பட்டு நடக்கவே முடியாமல் போய்விட்டது. வீட்டுக்குள்ளேயே யாராவது தூக்கிச் சென்றால்தான் அவர் தன் தேவைகளைச் செய்துகொள்ள முடியும் என்ற நிலை. அவருக்கு இது பெரும் வேதனையாக இருந்தது. 48 நாட்கள் பகவானைப் பிரார்த்தனை செய்தால் அவருக்கு குணமாகிவிடும் என்று பரிகாரம் சொன்னார்கள்.

வேறு ஓர் ஏழ்மையான கிருஷ்ண பக்தர் இருந்தார். அவர் மகளுக்குத் திருமணம் முடிய வேண்டும். நல்ல சம்பந்தம் அமைந்தது. ஆனால், திருமணச் செலவுக்கோ, நகைகள் வாங்கவோ அவரிடம் பணம் இல்லை. 48 நாட்கள் பகவானைப் பிரார்த்தனை செய்தால், பிரச்னைக்குத் தீர்வு கிடைக்கும் என்றார்கள்.

48வது நாள் அதிகாலையில் பணக்காரப் பக்தரின் கனவில் வந்த பகவான், "ஒரு பை நிறைய தங்கக்காசு எடுத்து வா. கோயில் குளத்தின் கரையில் அந்தப் பையை வைத்துவிட்டு என்னை நினைத்தபடி குளத்தில் ஸ்நானம் செய்து எழு" என்றார். ஏழைப் பக்தரின் கனவிலும் வந்த பகவான், "கோயில் குளத்தின் கரையில் ஒரு பை இருக்கும். அதை எடுத்துக்கொண்டு திரும்பிப் பார்க்காமல் ஓடிவிடு" என்றார்.

இரண்டுமே நடந்தது. தங்கக்காசு இருந்த பையை அந்த ஏழை பக்தர் எடுத்துக்கொண்டு ஓடுவதைப் பார்த்த பணக்காரர், குளத்திலிருந்து எழுந்துவந்து அவரைத் துரத்தியபடி ஓடினார். ஆனால், திரும்பிப் பார்க்காமல் ஓடிய அவரைப் பிடிக்க முடியவில்லை. அப்போதுதான் அவருக்கு உண்மை உறைத்தது. நடக்கவே இயலாமல் இருந்தவர், கடவுள் அருளால் குணமாகி ஓடும் அளவுக்குத் திறன் பெற்றிருந்தார்.

இப்படி இரண்டு பக்தர்களுக்கும் வேண்டியதைக் கொடையாக அளித்தார் கடவுள்.




# வயநாடு துயர் துடைக்க ரூ.25 லட்சம் வழங்கிய ராம்ராஜ் காட்டன்!

கேரள மாநிலம் வயநாட்டில் கனமழை காரணமாக ஏற்பட்ட நிலச்சரிவில் சூரல்மலை, முண்டக்கை, மேப்பாடி, அட்டமலை ஆகிய கிராமங்கள் மண்ணில் புதைந்தன. ஆயிரத்துக்கும் மேற்பட்ட கட்டடங்கள் உருக்குலைந்துவிட, 400–க்கும் அதிகமான மரணங்கள் நிகழ்ந்துவிட்டன.

இந்தப் பேரிடரில் எல்லாவற்றையும் இழந்து தவிக்கும் மக்களுக்குக் கைகொடுக்க உடனடியாகக் களத்தில் இறங்கியது ராம்ராஜ் காட்டன். கேரள முதல்வர் மாண்புமிகு பினராயி விஜயன் அவர்களைச் சந்தித்து, முதலமைச்சர் நிவாரண நிதிக்கு ரூ.25 லட்சம் வழங்கினார், ராம்ராஜ் காட்டன் நிறுவனர் திரு. கே.ஆர்.நாகராஜன் அவர்கள். உடன் சென்றிருந்த ராம்ராஜ் விளம்பரத் தூதர், நடிகர் திரு. ஜெயராம் அவர்கள் ரூ. 5 லட்சம் வழங்கினார். நிவாரண உதவிக்கு நன்றி தெரிவித்து, மீட்பு மற்றும் நிவாரணப் பணிகள் குறித்து அவர்களுடன் முதல்வர் கனிவாக உரையாடினார்.

துயர் பற்றிக் கேள்விப்பட்டதுமே ஓடோடிச்சென்று உதவிய ராம்ராஜ் காட்டன் நிறுவனர் திரு. கே.ஆர்.நாகராஜனுக்கு, கோவை பாரதிய வித்யா பவன் தலைவர் திரு. பி.கே.கிருஷ்ணராஜ வாணவராயர் பாராட்டுத் தெரிவித்துள்ளார்.





**DR.B.K. கிருஷ்ணராஜ் வாணவராயர்**
தலைவர்
பாரதீய வித்யா பவன்
கல்வி நிறுவனங்கள்

“ஒருவர் எவ்வளவு பெரிய பணக்காரர் என்பதோ, எவ்வளவு புகழ் சேர்த்திருக்கிறார் என்பதோ, எப்படிபட்ட அதிகாரத்தைக் கையில் வைத்திருக்கிறார் என்பதோ முக்கியம் அல்ல. எந்த அளவிற்கு அவரிடத்தில் மனிதம் இருக்கிறது என்பதுதான் முக்கியம். அந்த வகையில் உங்களுடைய இந்தத் தாராளக் கொடையை எண்ணி நான் மகிழ்கிறேன்.

கடினமாக உழைத்து ஈட்டிய நிதியில் பெரும்பங்கை ஒரு நல்ல காரியத்திற்குத் தரும்போதுதான் வாழ்க்கைக்கே அர்த்தம் ஏற்படுகிறது. அந்த வகையில் இன்று நீங்கள் ஓடோடிச் சென்று செய்த காரியம் என்னை உண்மையில் மிகவும் மகிழ்விக்கிறது. இந்தக் கொடை உள்ளம்தான் நம்மை உயர்த்துகிறது.

இதுபோன்ற துயரமான நேரங்களில் அரசாங்கம் பார்த்துக்கொள்ளும் என்று இருக்கக்கூடாது. நம் பங்கிற்கு ஏதாவது செய்ய வேண்டும். நண்பரே, வழக்கம்போல் நீங்கள் ஊருக்கு முந்திக்கொண்டு உதவி செய்துவிட்டீர்கள். உங்களுக்கும் உங்கள் குடும்பத்தாருக்கும் உங்கள் தொழிலுக்கும் இறைவன் இதற்குப் பல மடங்கு அவருடைய அருளைத் தந்து உங்களை உயர்த்த வேண்டும் என்று பிரார்த்திக்கிறேன்” என்று திரு. பி.கே.கிருஷ்ணராஜ வாணவராயர் பாராட்டுத் தெரிவித்துள்ளார்.

வயநாடு பேரிடர் நிகழ்ந்த அந்த நள்ளிரவிலிருந்து மீட்புப்பணி செய்துவரும் களப்பணியாளர்கள், தன்னார்வலர்கள், அலுவலர்கள் மற்றும் ராணுவத்தினர் அனைவருக்கும் ராம்ராஜின் சல்யூட்!





## நிர்வாகவியல் பிரிவு துவக்க விழாவில் ராம்ராஜ்!

கோவை ஸ்ரீ கிருஷ்ணா கலை அறிவியல் கல்லூரியில் Management Science துறை துவக்க விழா நடைபெற்றது. இந்த விழாவில் ராம்ராஜ் காட்டன் நிறுவனர் – தலைவர் திரு. K.R. நாகராஜன் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டார். கல்லூரியின் தலைமைச் செயல் அதிகாரி டாக்டர் K. சுந்தரராமன் மற்றும் கல்லூரி முதல்வர் டாக்டர் R.ஜெகஜீவன் ஆகியோர் அவரை வரவேற்றனர்.

நிர்வாகவியல் படிப்பில் சேர்ந்த மாணவ மாணவியருக்குத் தன்னம்பிக்கை ஊட்டும் வகையில், எதிர்காலத்தில் சிறந்த தொழிலதிபராக மாறுவதற்கான நுணுக்கங்களையும் ஆலோசனைகளையும் திரு. K.R. நாகராஜன் வழங்கினார். வாழ்க்கையிலும் தொழிலிலும் தனக்கு ஏற்பட்ட அனுபவங்களைக் கொண்டு எப்படி முன்னேற முடிந்தது என்பதையும் விளக்கினார். இதனைத் தொடர்ந்து மாணவ மாணவியர்களின் கேள்விகளுக்குப் பதில் அளித்து அவர்களின் சந்தேகங்களையும் தீர்த்து வைத்தார். இந்த விழா தங்களுக்கு ஒரு புது எழுச்சியை உண்டாக்குவதாக அமைந்தது என்று மாணவ, மாணவிகள் மகிழ்ச்சியுடன் தெரிவித்தனர்.




## கம்பன் கழக விழாவில் ராம்ராஜ்!

திருப்பூர் மாநகர கம்பன் கழகத்தின் தலைவராகவும் பொறுப்பு வகிக்கிறார் ராம்ராஜ் காட்டன் நிறுவனர் திரு. கே.ஆர்.நாகராஜன். கம்பன் கழகத்தின் நிகழ்ச்சிகளை அவரே பொறுப்பேற்று நடத்தி வருகிறார். திருப்பூர் கம்பன் கழகத்தின் 16–ம் ஆண்டு கம்பன் விழா நடைபெற்றது. விழாவுக்கு வந்திருந்த விருந்தினர்களை ராம்ராஜ் காட்டன் நிறுவனர் திரு. கே.ஆர்.நாகராஜன் வரவேற்றார்.

விழாவில், கம்பன் கழகச் செயலாளர் திரு. சோ. ராமகிருஷ்ணன் எழுதிய ‘அவிநாசி திருத்தல புராணம்’ நூலை, உச்ச நீதிமன்ற முன்னாள் நீதியரசர் திரு. வெ.ராமசுப்பிரமணியன் அவர்கள் வெளியிட, அவிநாசிலிங்கேஸ்வரர் ஆலய அறங்காவலர் குழுத் தலைவர் பாப்பீஸ் திரு. சக்திவேல் பெற்றுக்கொண்டார். தொடர்ந்து நடைபெற்ற பட்டிமன்றத்துக்கு நீதியரசர் திரு. வி.ராமசுப்பிரமணியன் அவர்கள் நடுவராக இருந்தார். இந்த விழாவில் திருப்பூர் ஏற்றுமதியாளர் சங்கத் தலைவர் திரு. கே.எம்.சுப்பிரமணியன், வனம் இந்தியா அறக்கட்டளை செயலாளர் திரு. ஸ்கை வே.சுந்தரராஜ் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.



# உணவு உணர்த்தும் கொடை!

தனியாக அறை எடுத்துத் தங்கி ஐ.ஏ.எஸ் தேர்வுக்கு கோச்சிங் வகுப்பு போய்க்கொண்டிருந்தான் ராம். வழக்கமாக வழியில் ஒரு மெஸ்ஸில் காலை உணவு சாப்பிட்டுவிட்டு வகுப்புக்குப் போவான். திரும்பி வர இரவாகிவிடும். சில நாட்களாகச் சாப்பிட்டதில், மெஸ் உரிமையாளர் ஓரளவு பரிச்சயம் ஆகியிருந்தார்.

நேற்று தாமதமாகிவிட்டதால் அவசரமாகக் கிளம்பினான். மெஸ்ஸில் வந்து தோசை வாங்கிக்கொண்டு பாக்கெட்டில் கைவிட்டபோதுதான் அவனுக்கு உறைத்தது. புதிதாக அணிந்த உடையில் பர்ஸை எடுத்து வைக்க மறந்துவிட்டான். செல்போனின் பின்பக்க உறையில் தேடிப் பார்த்தான். வழக்கமாகச் சில்லரை நோட்டுகள் வாங்கி அதில் வைப்பான். அங்கும் பணம் இல்லை.

அவன் பதற்றத்தைக் கவனித்த மெஸ்காரர், "என்ன ஆச்சுப்பா? சட்னி, சாம்பார் எதுவும் வேண்டுமா?" என்றார். அவன் தயக்கத்துடன், "இல்லைங்கண்ணா, கிளம்பற அவசரத்துல பர்ஸ் எடுத்து வைக்க மறந்துட்டேன். காசு இல்லை, இன்னைக்குச் சாப்பிடற தோசைக்கு நாளைக்குப் பணம் தரலாமா?" என்றான். அவர் சிரித்தபடி, "பரவாயில்லைப்பா, இன்னைக்கு நீ சாப்பிடறது என்னோட ட்ரீட்டா இருக்கட்டும்!" என்றார். அவனுக்கு அப்போதுதான் மூச்சு வந்தது. பணம் இல்லாமல் சாப்பிடுவதால் கூச்சம் ஏற்படக்கூடாது என்று, வழக்கத்தைவிட அன்று ராமைச் சற்று அதிகமாகவே கவனித்தார்.

இன்று போனதும் ராம் நேற்றைய தோசைக்கும் சேர்த்துப் பணம் கொடுத்தான். "என்னப்பா நீ, நான்தான் நேத்தே அது என்னோட ட்ரீட்னு சொல்லிட்டனே! அதுக்கு ஏன் காசு தர்றே?" என்று பாதி பணத்தைத் திருப்பி அவன் பாக்கெட்டில் வைத்தார் மெஸ்காரர். அவர் பரிமாறியது வழக்கத்தைவிட அதிகமாக ருசித்தது அவனுக்கு!

அலுவலகம் முடிந்து வீடு திரும்பினார் செல்வன். வீட்டில் எல்லோரும் வெளியூர் போயிருப்பதால் வெளியில்தான் சாப்பிட வேண்டும். வீட்டுக்கு வரும் வழியில் ஒரு சிறிய உணவுக்கடை இருக்கும். கணவனும் மனைவியுமாக ஒரு தம்பதி நடத்தும் அந்தக் கடையில் டிபன் சுத்தமாகவும் தரமாகவும் இருக்கும் என்பதால், வீட்டில் யாரும் இல்லாத நாட்களில் அங்கு சாப்பிடுவது அவர் வழக்கம். சில நேரங்களில் வீட்டுக்கே பார்சல் அங்குதான் வாங்குவார்.

இன்று செல்வன் அங்குதான் சாப்பிடப் போனார். வழக்கத்தைவிடக் கூட்டம் அதிகமாக இருந்தது. உணவகத் தம்பதியர் சுற்றிச் சுழன்று பரிமாறியபடி இருந்தனர். செல்வன் தோசை வாங்கிச் சாப்பிட ஆரம்பித்தபோது, சற்றுத் தள்ளி நின்ற ஒரு பெண்ணைக்

கவனித்தார். தோளில் ஒரு குழந்தையைத் தூங்க வைத்தபடிப் பரிதாபமாக நின்றிருந்தார் அந்தப் பெண். பசியில் இருக்கும் அவர், தயக்கத்துடன் சிலரிடம் தன் வயிற்றைத் தொட்டுக்காட்டி யாசகம் கேட்பது தெரிந்தது. உணவகத்தில் சாப்பிடுவோரை அவர் ஏக்கத்துடன் பார்த்தபடி இருந்தார்.

அத்தனைக் கூட்டத்துக்கு நடுவிலும் அந்தப் பெண்ணைக் கவனித்த கடைக்காரர், அவசரமாகச் சில இட்லிகளை பார்சல் கட்டி எடுத்துப் போய் கொடுத்துவிட்டு வந்தார். செல்வன் சாப்பிட்டு முடித்ததும், ''அந்தப் பெண்ணுக்கு நீங்க கொடுத்த இட்லிக்கும் சேர்த்து நான் காசு தர்றேன்'' என்றார். கடைக்காரர் சிரித்தபடி மறுத்து, உணவகத்தில் அமர்ந்திருந்த தன் குழந்தைகளைக் காட்டினார். ''அவங்க இங்க வந்து வியாபாரம் கத்துக்கறதோட, இந்த மாதிரி நல்ல விஷயங்களையும் எங்களைப் பார்த்துக் கத்துக்கணும் சார்! அப்பதான் நல்லா வளர்வாங்க'' என்றார்.

**ஏ**ழ்மையான குடும்பத்தில் பிறந்து, அப்பாவை இழந்து, அம்மாவின் உழைப்பில் தட்டுத் தடுமாறிப் படித்து கல்லூரி வரை வந்தான் ஹரி. கல்லூரி போகும் நிறைய நாட்களில் மதியம் சாப்பிடவே அவனிடம் காசு இருக்காது. பசியோடு மாலை வீடு திரும்பி வருவான். வீட்டில் ஏதாவது இருந்தால் சாப்பிடுவான். இல்லையென்றால் நேராக இரவு உணவுதான் சாப்பிட முடியும்.

கல்லூரியில் படிக்கும்போதே அவன் பகுதிநேரமாக டியூஷன் எடுத்துச் சம்பாதித்து வீட்டுக்குக் கொடுப்பான். கோச்சிங் சென்டருக்கு டியூஷன் எடுக்கப் போகும்போது வழியில் ஒரு பஜ்ஜி கடையைக் கடந்து போவான். பசியுடன் இருக்கும் நாட்களில் அங்கு பஜ்ஜி சாப்பிடலாமா என்று தோன்றும். கையில் காசு இருக்காது. தயக்கத்துடன் கடந்து போய்விடுவான்.

ஒரு நாள் கோச்சிங் சென்டரில் சம்பளம் வாங்கிக்கொண்டு வரும்போது அவனுக்குச் சபலம் வந்தது. அதில் 20 ரூபாய் எடுத்து பஜ்ஜி சாப்பிட்டுவிட்டு அம்மாவிடம் சொல்லிக்கொள்ளலாம் என நினைத்தான். பஜ்ஜியும் சாப்பிட்டான். ஆனால், காசு குறைந்தால் அம்மா கண்ணீர் விடுவாரோ என்று பயந்தான். கடையில் கூட்டம் தாறுமாறாக இருந்ததால், கடைக்காரர் அவனைக் கவனிக்கவில்லை. கொஞ்ச நேரம் அங்கேயே நின்றிருந்து, காசு கொடுக்காமல் நழுவிவிட்டான். எப்போதும்



கூட்டம் நெரியும் அந்தக் கடையில் அதன்பின் பல பசி நாட்களில் அவன் இப்படிச் சாப்பிடுவது வழக்கமானது. கடைக்காரரும், வாடிக்கையாளர்கள் கொடுக்கும் காசை வாங்கிப் போட்டுக்கொள்வாரே தவிர யாரையும் கவனிக்கவோ, கேட்கவோ மாட்டார்.

ஆண்டுகள் உருண்டோட, இப்போது ஹரி ஐ.டி நிறுவனம் ஒன்றில் நல்ல வேலையில் சேர்ந்தான். முதல் மாத சம்பளம் வாங்கியதும் சொந்த ஊர் வந்தான். வழியிலேயே பஜ்ஜி கடைக்குப் போய் சாப்பிட்டான். 500 ரூபாயைக் கடைக்காரரிடம் கொடுத்தான். “ரெண்டு பஜ்ஜி சாப்பிட்டுட்டு 500 ரூபாய் கொடுத்தா எப்படி?” என்று கடைக்காரர் கேட்க, “அப்புறமா சில்லரை வாங்கிக்கறேன்” என்று திரும்பினான் ஹரி.

அதை அவன் கேட்கவும் போவதில்லை. ஊருக்கு வரும்போதெல்லாம் இதேபோலச் செய்யவும் போகிறான். சில கடன்கள் தாமதமாகவே அடைக்கப்படுகின்றன. ●

# வாசகர் கடிதங்கள்

**‘வெ**ண்மை’ ஆகஸ்ட் இதழ் முழுவிளையாட்டுச் சிறப்பிதழாக வந்திருப்பதும், சில புதிய, அறியாத செய்திகளைப் பதிவு செய்திருப்பதும், சில விளையாட்டு வீரர்களின் விசேஷ செய்திகளைத் தொட்டிருப்பதும் அருமை.

***– கி.சு.மணி, மும்பை கிரிக்கெட் சங்க விளையாட்டு வீரர்கள் பதிவுத்துறை முன்னாள் அதிகாரி, சென்னை.***

**வி**ளையாட்டு மூலம் குழந்தைகள் தன்னம்பிக்கை அடைகிறார்கள், அற உணர்வு பெறுகிறார்கள், கல்வியிலும் சிறந்தவர்களாக மாறுகிறார்கள் என்பதைத் தன் கடிதம் மூலம் ராம்ராஜ் நிறுவனர் திரு.கே.ஆர்.நாகராஜன் விளக்கிய விதம் சிறப்பு.

***– இரா.நாகநாதன், திருச்சி.***

**ம**கத்தான விளையாட்டு வீரர்களின் கதைகள் மற்றும் உண்மைச் சம்பவங்கள் மூலம் ஒவ்வொருவருக்கும் வளர்வதற்கான வாழ்க்கைப் பாடங்களைத் தந்திருக்கிறது ‘வெண்மை’ விளையாட்டுச் சிறப்பிதழ்.

***– ப.கணபதி, கோவை.***



## உதவாத வாழ்வில் அர்த்தமில்லை!

'பிராங்க் வீடியோ' என்று சிலர் செய்வார்கள். தூரத்தில் கேமராவை ஒளித்து வைத்துவிட்டு யாரிடமாவது வந்து வேடிக்கை காட்டி அதைப் படம் பிடிக்கும் செயல் இது. அமெரிக்காவில் ரைஸ்மேன் என்ற யூடியூபர் இப்படி நற்செயல்களுக்காக பிராங்க் வீடியோக்கள் செய்வார். பொய்யாக எதையாவது செய்து, ஒருவருக்குள் இருக்கும் மனிதத்தன்மையைச் சோதிப்பது அவர் வழக்கம்.

நகரின் பிசியான சிக்னல் ஒன்றில் ஒருவர் 'நான் வீடற்ற முன்னாள் ராணுவ வீரன். உதவி செய்யுங்கள்' என்ற அட்டையைப் பிடித்தபடி யாசகம் செய்துகொண்டிருந்தார். அவரை நெருங்கிய ரைஸ்மேன் கொஞ்சம் பணம் யாசகம் தந்துவிட்டு, ''என் சகோதரனைக் காணவில்லை, அவன் புகைப்படம் இதுதான். எங்காவது பார்த்தால் சொல்லுங்கள்'' என்று ஒரு புகைப்படம் அச்சிட்டுக் 'காணவில்லை' என எழுதிய பேப்பரைக் கொடுத்துவிட்டுப் போனார்.

அதைக் கொஞ்ச நேரம் பார்த்த அந்த முன்னாள் ராணுவ வீரர், அதன்பின் தனக்கு உதவி கேட்காமல் அந்தக் காணவில்லை பேப்பரைத் தூக்கி எல்லோருக்கும் காண்பிக்க ஆரம்பித்தார். இதை மறைந்திருந்து பார்த்த ரைஸ்மேன், அவரை நெருங்கிக் காரணம் கேட்டார். "நீங்க சகோதரனைக் காணோம்னு கஷ்டப்படறீங்க. உங்களுக்கு உதவி செய்யலைன்னா, இந்த வாழ்க்கையில் என்ன அர்த்தம் இருக்கு?" என்று சொன்னார் அந்த மனிதர்.

தன் சோதனையைப் பற்றிச் சொல்லி, அவரைக் கரம்கூப்பி வணங்கிப் பரிசு கொடுத்தார் ரைஸ்மேன்.

## இதுவும் கொடைதான்!

பள்ளிக்கூடத்தின் அருகே ஒரு மூதாட்டி இட்லிக்கடை போட்டிருந்தார். வீட்டில் சமைக்காதபோது சில பிள்ளைகள் அங்கே வந்து சாப்பிட்டுவிட்டுப் பள்ளிக்குப் போவார்கள். ஒருநாள் அந்த வழியாகத் தலைமையாசிரியர் வந்தபோது, இரண்டு சிறுமிகளை அந்த மூதாட்டி வேலை வாங்கிக்கொண்டிருப்பதைக் கவனித்தார். ஒரு சிறுமி தண்ணீர் பிடித்து ஊற்ற, இன்னொரு சிறுமி பாத்திரங்களைக் கழுவியபடி இருந்தார்.

உடனே தலைமையாசிரியர், ''ஏன்மா எங்க பள்ளிக்கூடப் பிள்ளைகளை வேலை வாங்கறே? குழந்தைகளை வேலை வாங்கறது குற்றம்னு தெரியாதா?" என்று மூதாட்டியைச் சத்தம் போட்டார்.

அவரைத் தனியே அழைத்துவந்த மூதாட்டி, "தப்பா எடுத்துக்காதீங்க சார்! அந்தக் குழந்தைங்க ரெண்டு பேரும் ஏழைங்க. வீட்டுல சாப்பிட வழியில்ல, காசும் இல்ல. தினமும் நான்தான் இட்லி கொடுக்கறேன். சும்மா கொடுத்தா நல்லா இருக்காது. உழைச்சாதான் எதுவும் கிடைக்கும்னு அவங்களுக்குப் புரியணும். அதனால்தான் இப்படிச் சின்னச் சின்னதா வேலை வாங்கிட்டு, 'நீங்க செய்த வேலைக்குச் சாப்பிட்டுட்டுப் போங்க'ன்னு சொல்வேன். அவங்களும் கூச்சமில்லாமச் சாப்பிடுவாங்க" என்றார்.

"நாங்க புத்தகத்தை வச்சுப் பாடம் நடத்தறோம், நீங்க வாழ்க்கைப்பாடம் கற்றுத் தர்றீங்க'' என்று சொல்லி மூதாட்டியை வணங்கிவிட்டு நகர்ந்தார் தலைமையாசிரியர்.



## நமக்கே திரும்ப வரும்!

உயிரற்ற பொருட்கள்கூடக் கொடை தருகின்றன. மரம் நிழல் தந்து உதவுகிறது. புல்லங்குழல் இசைக்குத் தன் உயிர் தந்து உதவுகிறது. ஏணி கூட நம்மை மேலே ஏற்றிவிட உதவுகிறது. ஊன்றிக் கவனித்தால், எல்லாமே உதவுகின்றன என்று புரியும். ஆகவே முடிந்த அளவு பிறருக்கு உதவி செய்ய வேண்டும். அடுத்தவருக்கு உதவி செய்தால் பின்னால் அது நமக்கே திரும்பக் கிடைக்கும். இதுவே பிரபஞ்ச விதி.



## எண்ணமே மேலானது!

வாசலில் யாரோ யாசகம் கேட்டதும் ஒரு பெண்மணி வெளியே வந்தார். வீதியில் விளையாடியபடி இருந்த தன் மகளை அழைத்து அவள் கைகளால் அரிசியைத் தானம் செய்யச் சொன்னார். பக்கத்து வீட்டுப் பெண்மணியும் அதைப் பார்த்துவிட்டு அப்படியே தன் மகள் கைகளால் தானம் செய்தார். அதுவே தொடர்கதை ஆனது.

காலம் நகர்ந்தது. அந்த இரண்டு பெண்மணிகளும் இறந்து சொர்க்கம் சென்றார்கள். முதல் அம்மாவுக்கு அங்கு உயர்வான இடம் கிடைக்க, இரண்டாவது அம்மாவுக்குக் கீழான இடமே கிடைத்தது. “இருவருமே ஒரே மாதிரிதான் தானம் செய்தோம். அப்புறம் ஏன் இந்தப் பாரபட்சம்?” என்று அவர் இறைவனிடம் வாதிட்டார்.

“இருவரின் செயல்களும் ஒன்றுதான். ஆனால், எண்ணங்கள் வேறு வேறு! தனக்குப் பிறகு தன் குழந்தையும் இந்தத் தானத்தைத் தொடர்ந்து செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில் அவர் குழந்தையின் கையால் தானம் செய்தார். நீயோ, உன் கைகளால் எடுத்தால் நிறைய அரிசி செலவாகும் என்று குழந்தை கையால் தானம் செய்தாய். செய்தது கொடை என்பதால் உனக்குச் சொர்க்கம் கிடைத்தது. ஆனால், சுயநல எண்ணம் இருந்ததால் கீழான இடம் கிடைத்தது” என்றார் இறைவன்.



உயர்ந்த எண்ணங்களுடன் உன்னதமாகச் செய்வோம் உதவி!

## இப்படியும் கொடை தந்தார்!



குஜராத் மாநிலம் மெக்சானா நகரில் கிம்ஜிபாய் பிரஜாபதியைத் தெரியாதவர்கள் இருக்க முடியாது. இத்தனைக்கும் அவர் அரசியல்வாதியோ, அரசு அதிகாரியோ, பெரும் பணக்காரரோ இல்லை. அந்த வட்டாரத்தில் இருக்கும் கோயில்களின் வாசலில் இருந்தபடி யாசகம் செய்து பிழைப்பவர். அவர் ஏன் பிரபலமானார்?

அங்கு ஏழைக்குடும்பங்களில் பெண்கள் படிக்கச் செல்வது குறைவு. அவர்கள் படிக்க ஊக்கப்படுத்துவதைத் தனது வாழ்நாள் கடமையாக்கிக்கொண்டார் கிம்ஜிபாய். ஆண்டு முழுக்க யாசகம் செய்து சேர்த்து வைக்கும் பணத்தை எடுத்துக்கொண்டு ஒரு பள்ளிக்கூடத்துக்கு வருவார். அங்கு படிக்கும் பெண் குழந்தைகளுக்குப் புத்தகங்கள், நோட்டு, பேனா, பென்சில், உடைகள் என்று வாங்கிக் கொடுப்பார்.

ஒருமுறை அவரிடம் காசு அதிகமாகச் சேர்ந்துவிட்டது. உடனே அந்தப்பள்ளியில் மிகவும் ஏழைக் குடும்பங்களைச் சேர்ந்த 10 பெண் குழந்தைகளுக்குத் தங்கத்தில் தோடு வாங்கிக் கொடுத்தார். தனக்கென ஒரு பைசாகூடச் சேர்த்து வைக்காமல் பெண் குழந்தைகளுக்குக் கொடையளித்த கிம்ஜிபாய் ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு இறந்தபோது, அந்தப் பகுதியே கண்ணீர் அஞ்சலி செலுத்தியது.



# கல்விக் கொடை!

கடையேழு வள்ளல்கள் பற்றி இலக்கியங்களில் படித்திருக்கிறோம். மனிதர்களின் துன்பங்களைக் கண்டு இரங்கி, பாரி போன்ற அந்த மன்னர்கள் கருணையுடன் அளித்த கொடைகள் பற்றிப் பழந்தமிழ்ப் பாடல்கள் பேசுகின்றன. இந்தக் காலத்திலும் வள்ளல்கள் ஏராளமானோர் இருக்கிறார்கள். தங்கள் கடும் உழைப்பால் சேர்த்த பெரும் செல்வத்தில் ஒரு பகுதியை அறக்கட்டளைகளுக்கு வழங்கி, எளிய மக்களுக்குச் சேவை செய்யும் அத்தனை தொழிலதிபர்களும் வள்ளல்கள்தான்! தமிழகத்தில் இப்படி நூற்றுக்கணக்கான வள்ளல்களை உதாரணமாகச் சொல்ல முடியும்.

கல்வியே இன்று ஒரு குடும்பத்தை, ஒரு தலைமுறையை உயர்த்தும் ஏணியாக இருக்கிறது. அப்படிப்பட்ட கல்வி வாய்ப்பு எல்லோருக்கும் கிடைக்க வேண்டும் என்று பலர் பாடுபட்டார்கள். அப்படித் தமிழர்களுக்குக் கல்விக்கொடை அளித்தவர்களில் தலைமகன் கர்மவீரர் காமராஜர்.

அதன்பின் அரசின் முயற்சிகளைத் தாண்டிப் பல தனிமனிதர்களும் கல்விக்கொடை அளித்தார்கள். சிதம்பரத்தில் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தைத் தொடங்கிய ராஜா சர். அண்ணாமலை செட்டியார், காரைக்குடியில் அழகப்பா பல்கலைக்கழகத்தை உருவாக்கிய வள்ளல் அழகப்ப செட்டியார், கோவை பகுதியில் அவினாசிலிங்கம் பல்கலைக்கழகத்தைத் தொடங்கிய பத்மபூஷன் டி.எஸ்.அவினாசிலிங்கம், பல கல்வி நிறுவனங்களை உருவாக்கி அளித்த வள்ளல் பச்சையப்ப முதலியார், செங்கல்வராய நாயக்கர், அருட்செல்வர் பொள்ளாச்சி நா.மகாலிங்கம், மூக்கையா தேவர், வீரய்யா வாண்டையார் என்று பல பெருமைக்குரிய ஆளுமைகள் இந்தச் சேவையை வளர்த்தெடுத்தார்கள். இன்றும் பலர் கல்விச்சேவையை அற உணர்வுடன் செய்து வருகிறார்கள். உயர்கல்வியில் தமிழகம் இந்தியாவிலேயே தலைசிறந்து விளங்குவதற்குக் காரணம், இப்படிப் பல கல்வித்தந்தைகள் செய்யும் சேவைப்பணிதான்!

இதேபோல உலகப் புகழ்பெற்ற கல்வி நிறுவனங்கள் பற்றி நெகிழ்ச்சிக் கதைகள் உண்டு. சர்வதேச அளவில் தலைசிறந்தது, அமெரிக்காவின் ஹார்வர்டு பல்கலைக்கழகம். ஒருநாள் அங்கு நடுத்தர வயதுத் தம்பதியர் வந்திருந்தனர். பல்கலைக்கழக இயக்குநரைப் பார்க்க வேண்டும் என்றனர்.

எளிமையாக உடையணிந்து சாதாரணத் தோற்றத்தில் இருந்த அவர்களைப் பார்த்த பல்கலைக்கழக வரவேற்பாளர், இவர்கள் ஏதோ மாணவர் சேர்க்கைக்காக வேண்டுகோள் வைக்க வந்திருப்பார்கள் என்று நினைத்து, ''அவர் வேலையாக இருக்கிறார், இப்போது பார்க்க முடியாது'' என்றார்.

''பரவாயில்லை, நாங்கள் காத்திருக்கிறோம்'' என்று அங்கிருந்த பெஞ்ச்சில் அவர்கள் உட்கார்ந்துகொண்டார்கள். இரண்டு மணி நேரம் ஆனது, அவர்கள் அசையவில்லை. இயக்குநரின் அறைக்குள் போன வரவேற்பாளர், “அவர்கள் உங்களைப் பார்க்காமல் போக மாட்டார்கள் போலிருக்கிறது” என்றார். இயக்குநர் வேண்டா வெறுப்பாக அவர்களை உள்ளே கூப்பிட்டார்.

உள்ளே வந்ததும் அந்தத் தம்பதியர் மெல்லிய குரலில், “எங்கள் மகன் சிறுவயதிலேயே இறந்துவிட்டான். அவன் நினைவாக ஏதாவது செய்ய ஆசைப்படுகிறோம்” என்றனர். இயக்குநர் கிண்டலாக, “ஒவ்வொருவருக்கும் இங்கு நினைவிடம் கட்டினால், இது கல்லறை ஆகிவிடுமே” என்றார்.

“இல்லை, நாங்கள் நினைவகமோ, சிலையோ வைக்கச் சொல்லவில்லை. ஹார்வர்டு பல்கலைக்கழகத்தில் எங்கள் மகன் நினைவாக ஒரு கட்டடம் கட்டித் தர விரும்புகிறோம்.”

“அதற்கு எவ்வளவு செலவாகும் தெரியுமா? இங்கு இப்போது இருக்கும் எங்கள் கட்டடங்களைக் கட்டி முடிக்க 70 லட்சம் டாலர் செலவானது” என்று இயக்குநர் குரலை உயர்த்திச் சொன்னார்.

இப்போது அந்தத் தம்பதியர் தங்களுக்குள் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டனர். “என்னது, ஒரு பல்கலைக்கழகம் கட்டி முடிக்க 70 லட்சம் டாலர் மட்டும்தான் ஆகுமா? அப்படியானால் நாங்கள் தனியாக ஒரு பல்கலைக்கழகம் கட்டிக்கொள்கிறோம்” என்றபடி எழுந்தனர். அந்த நிமிடத்தில் அந்த இயக்குநர் திக்பிரமை பிடித்தவராக அமர்ந்திருந்தார்.

அந்தத் தம்பதியரான லேலண்ட் ஸ்டான்போர்டு–ஜேன் ஸ்டான்போர்டு உருவாக்கியதுதான் பெருமைக்குரிய ஸ்டான்போர்டு பல்கலைக்கழகம். நோபல் பரிசு வென்ற 58 விஞ்ஞானிகளையும், உலகின் 74 பில்லியனர்களையும் உருவாக்கிய கல்வி வளாகம் அது.

இவர்களைப் போன்ற இன்னொருவர், சக் ஃபீனே. அமெரிக்காவின் சான் ஃபிரான்சிஸ்கோ நகரில் சாதாரணமாக ஒரு அடுக்குமாடிக் குடியிருப்பில் எளிமையான வீட்டில்தான் 92 வயது வரை வசித்து வந்தவர். கடந்த ஆண்டு இறக்கும்வரை அவர் அந்த வீட்டை வசதிக்குறைவாகக் கருதவில்லை. விலையுயர்ந்த உடைகள் வாங்கி அணிந்ததில்லை. லட்சங்களில் விற்கும் பிராண்டட் வாட்ச்சுகள் வாங்கிக் கட்டிக்கொண்டதில்லை. தான் அணியும் கண்ணாடி ஃபிரேமைக்கூட அதுவாக உடையும்வரை மாற்ற மாட்டார். சொந்தமாக காரும் வைத்திருக்கவில்லை. பெரும்பாலும் அலுவலக காரைப் பயன்படுத்துவார் அல்லது பேருந்தில் பயணம் செய்வார். அவர் அலுவலகத்துக்கு எடுத்துச் செல்லும் பைகூட



ஆங்காங்கே சாயம் போய் வெளுத்திருக்கும். ‘மற்றவர்கள் பார்த்தால் என்ன நினைப்பார்களோ’ என்றெல்லாம் அவர் கூச்சப்பட்டதில்லை.

இந்த மனிதர் தன் வாழ்நாள் முழுக்க சுமார் 67 ஆயிரம் கோடி ரூபாய் அளவுக்குத் தர்மகாரியங்கள் செய்தார் என்றால், நம்புவதற்குக் கடினமாகத்தான் இருக்கும். ரீடெயில் வர்த்தகம் மூலம் அவர் பல கோடிகளை வெறித்தனமாகச் சம்பாதித்தார். ஆனால், எதையும் தனக்கென வைத்துக்கொள்ளவில்லை. எல்லாவற்றையும் தர்ம காரியங்களுக்கு எழுதி வைத்தார். காரணம் கேட்டதற்கு, “மனிதர்கள் ஆடையின்றித்தான் பிறக்கிறார்கள், தனியாகத்தான் இறுதியில் இந்த உலகிலிருந்து போகிறார்கள்” என்றார்.

அமெரிக்காவின் கலிபோர்னியா பல்கலைக்கழகம், கார்னெல் பல்கலைக்கழகம், ஸ்டான்போர்டு பல்கலைக்கழகம் என்று பல கல்வி நிறுவனங்களுக்கு நிதியளித்தார். அயர்லாந்து நாட்டில் ஏழு பல்கலைக்கழகங்களைப் புதிதாகக் கட்டினார். இன்னும் பல நாடுகளுக்கு உதவி செய்துள்ளார். ஆனால், எங்குமே தன் பெயரை வெளிக்காட்டிக் கொள்ளாமல் சத்தமின்றி உதவி செய்தார்.


வெண்மை சந்தா...

**மகளிர் தின சிறப்புச் சலுகை!**



மார்ச் 8-ம் தேதி கொண்டாடப்படும் சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு வெண்மை மாத இதழுக்கான சந்தா தொகையில் இந்த ஆண்டு முழுக்க சந்தா செலுத்தும் பெண்களுக்குச் சிறப்புச் சலுகை வழங்கப்படுகிறது.

**ஓர் ஆண்டு சந்தா: ரூ. ~~200~~/–**
**மகளிர் சலுகை சந்தா: ரூ. 150/–**

**இரண்டு ஆண்டுகள் சந்தா: ரூ. ~~380~~/–**
**மகளிர் சலுகை சந்தா: ரூ. 300/–**

இச்சலுகையை முழுமையாகப் பயன்படுத்தி மகளிர் தங்களையும் தங்கள் இல்லத்தையும் சுற்றத்தையும் இன்னும் சிறப்பாகப் பேணி நலம் பெற வேண்டுகிறோம். (சந்தா செலுத்தும் வழிமுறைகளுக்கு 23-ம் பக்கத்தைப் பார்க்கவும்.)

# மத்தியப் பிரதேச முதல்வர் சந்திப்பில் ராம்ராஜ்!

தமிழ்நாட்டின் தொழில்துறையினருக்கு மத்தியப்பிரதேச மாநிலத்தில் இருக்கும் முதலீட்டு வாய்ப்புகள் குறித்து தொழில் நிறுவனங்களின் தலைவர்களுடன் கலந்துரையாடல் செய்வதற்காக அந்த மாநிலத்தின் மாண்புமிகு முதல்வர் டாக்டர் மோகன் யாதவ் அவர்கள் கோவை வந்திருந்தார்.

முதல்வர் மற்றும் அவருடன் வந்திருந்த மூத்த ஐ.ஏ.எஸ் அதிகாரிகள் ஆகியோரை ராம்ராஜ் காட்டன் நிறுவனர் திரு.கே.ஆர்.நாகராஜன் அவர்கள் சந்தித்து உரையாடினார். மத்தியப் பிரதேசத்தில் தொழில் நிறுவனங்களை அமைப்பதற்கு அந்த அரசு ஏற்படுத்திக் கொடுக்கும் வசதிகள் மற்றும் கட்டமைப்புகள் குறித்து அவர்கள் விவரித்தனர். தமிழ்நாட்டைப் போலவே செழுமையான பண்பாடும் பாரம்பரியமும் மரபும் கொண்ட மத்தியப் பிரதேசத்தில் தொழில் தொடங்குவது, வட இந்திய மக்களைச் சென்றடைவதற்கு உதவும் என்றும் அவர்கள் குறிப்பிட்டனர். "முதல்வருடன் நடந்த சந்திப்பு ஆக்கப்பூர்வமானதாக இருந்தது" என்று சொன்னார் திரு.கே.ஆர்.நாகராஜன்.



இந்தியாவின் முதன்மையான பாரம்பரிய மற்றும் பண்பாட்டு ஆடைகள் உற்பத்தி நிறுவனமான ராம்ராஜ் காட்டன், மத்தியப் பிரதேசத்தில் தடம் பதிக்க விருப்பம் தெரிவித்துள்ளதாக அப்போது அவர் குறிப்பிட்டார். "மத்திய இந்தியாவில் ராம்ராஜ் காட்டன் நிறுவனத்தின் பாரம்பரிய ஆடைகள் சென்று சேர்வதை இது உறுதி செய்யும். இதன் மூலம் மத்தியப் பிரதேசத்தின் பொருளாதார வளர்ச்சியை உயர்த்துவதுடன், தமிழகத்தின் பாரம்பரிய ஆடைப் பண்பாட்டை அங்குள்ள மக்களுக்குக் கொண்டு சேர்க்கவும் முடியும்" என்று திரு.கே.ஆர்.நாகராஜன் விவரித்தார்.




# அருட்தந்தை ஜெயந்தி தின விழாவில் ராம்ராஜ்!



அருட்தந்தை வேதாத்திரி மகரிஷி அவர்களின் 114வது ஜெயந்தி தின விழா 14.08.2024 அன்று ஆழியாறு அறிவுத்திருக்கோவில் வளாகத்தில் சிறப்பாக நடைபெற்றது. இந்த விழாவில் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்ற காந்தியச் சிந்தனையாளர் திரு. தமிழருவி மணியன் அவர்களுக்கு ராம்ராஜ் காட்டன் நிறுவனரும் உலக சமுதாய சேவா சங்கத்தின் துணைத் தலைவருமான திரு.கே.ஆர்.நாகராஜன் அவர்கள் நினைவுப் பரிசு வழங்கிச் சிறப்பித்தார். மேலும் முந்தைய நாள் நடைபெற்ற அறங்காவலர்கள் கூட்டத்தில் கலந்துகொண்டு வரவேற்புரை வழங்கி, வளர்ச்சிக்கான தனது கருத்துகளையும் அறங்காவலர்களுடன் பகிர்ந்துகொண்டார்.

## ஜெம் நிறுவனர் புத்தக வெளியீட்டு விழாவில் ராம்ராஜ்!

கோவையில் தொடங்கி இன்று தமிழகத்தின் முக்கிய நகரங்களில் சேவையாற்றி வரும் ஜெம் மருத்துவமனைகளின் நிறுவனர் டாக்டர் C.பழனிவேலு அவர்களின் சுயசரிதை நூலான 'GUTS' வெளியீட்டு விழா கோவையில் நடைபெற்றது. இதில் பங்கேற்று அவரை வாழ்த்திய ராம்ராஜ் காட்டன் நிறுவனர் திரு.கே.ஆர்.நாகராஜன் அவர்கள், இதைத் தொடர்ந்து அவருக்கு ஒரு வாழ்த்துக் கடிதமும் அனுப்பினார்.

'ஒரு சிறிய கிராமத்தில் எளிமையான விவசாயக் குடும்பத்தில் பிறந்த தங்களின் பயணம், மருத்துவ உலகில் தவிர்க்க முடியாத மிகப்பெரிய ஆளுமையாக உங்களை உருவெடுக்க வைத்தது. தங்களது மன உறுதியும், விடாமுயற்சியும் துணிச்சலும் இதைச் சாதித்தது. உங்களின் வாழ்க்கைப் பயணத்தின் சிறப்புகளை உணர்ந்த மேதகு. டாக்டர் A.P.J. அப்துல் கலாம் அவர்கள் கேட்டுக் கொண்டதற்கு இணங்க, தங்களது சுயசரிதையை எழுதியுள்ளீர்கள். மேலும் அவரது நினைவு நாளில் இந்தப் புத்தகம் வெளியிடப்பட்டதும் மிகவும் சிறப்புக்குரியது. சில வருடங்களுக்கு முன் தங்களது மருத்துவமனையில் நடைபெற்ற விழாவில், மேதகு. அப்துல் கலாம் அவர்களுடனும் தங்களுடனும் கலந்துகொண்ட விழா நினைவுகள் எனக்குள் மலரும் நினைவுகளாக மலர்ந்தன.

மேலும் இந்த விழாவில் TATA SONS தலைவர் திரு. N.சந்திரசேகரன் அவர்களுடைய அறிமுகமும் நட்பும் கிடைத்ததை எண்ணிப் பெருமைப்படுகிறேன். கொங்கு மண்டலத்தின் அனைத்து முக்கியப் பிரமுகர்களையும் ஒருங்கிணைத்து தாங்கள் ஏற்பாடு செய்திருந்த இவ்விழா அனைவரிடமும் உறவுகள் மேம்பட வாய்ப்பாக அமைந்தது. நீங்களும் உங்கள் அன்புக் குடும்பமும் மற்றும் தொழில் வளங்களும் அருட் பேராற்றல் அருளால் உடல்நலம், நீள் ஆயுள், நிறை செல்வம், உயர் புகழ், மெய்ஞ்ஞானம் ஓங்கி வாழ்க வளமுடன்' என்று அந்தக் கடிதத்தில் வாழ்த்தியுள்ளார்.






## நகைச்சுவை அரங்க விழாவில் ராம்ராஜ்!

திருப்பூர் நகைச்சுவை அரங்கம் சார்பில் சுதந்திர தின விழாவை முன்னிட்டு 'சிரிப்போம்... சிந்திப்போம்' எனும் நகைச்சுவைப் பாட்டரங்கம் நடந்தது. திருப்பூர் நகைச்சுவை அரங்கத்தின் தலைவரும், ராம்ராஜ் காட்டன் நிறுவனத்தின் தலைவருமான திரு.கே.ஆர்.நாகராஜன் நிகழ்ச்சிக்குத் தலைமை தாங்கினார். "நல்லதைத் தெரிந்துகொள்வதுதான் ஆன்மிகத்தின் பலம். நம் மனோபலத்தைப் பற்றிச் சிந்திக்கவே இந்த நிகழ்ச்சி நடக்கிறது. நன்றாகச் சிரியுங்கள். நகைச்சுவை என்பது ஒவ்வொரு தனிமனிதருக்கும், அவர் குடும்பத்திற்கும் இந்தச் சமுதாயத்திற்கும் பெரும் பயன் அளிக்கிறது. சிரித்து ரசித்து வாழ்வோம்" என்று தன் தலைமையுரையில் அவர் குறிப்பிட்டார்.

இந்த விழாவில் திருப்பூர் சைமா சங்கத்தின் தலைவர் வைகிங் திரு. ஏ.சி.ஈஸ்வரன், கிளாசிக் போலோ திரு.T.R. சிவராம் ஆகியோரும் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொண்டனர். ஈரோடு முகில் கலைக்குழுவினரின் சமுதாய விழிப்புணர்வு நிகழ்ச்சியும் மற்றும் திரு. சுப மாரிமுத்து குழுவினரின் பாட்டரங்கம் நிகழ்ச்சியும் நடைபெற்றது. விழாவில் ஆயிரக்கணக்கான பொதுமக்கள் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.



# கருணையுடன் கொடுங்கள்!



உண்மையான அக்கறையுடனும் கருணையுடனும் நமக்கோ, பிறருக்கோ ஏதோ ஒன்றை அளிப்பதுதான் கொடை. அது பொருளாக இருக்கலாம், பணமாக இருக்கலாம், வழிகாட்டுதலாக இருக்கலாம், அல்லது வேறு வகை உதவியாக இருக்கலாம்.

கொடையின் சிறப்பான அம்சமே, அதில் நம் நலனைப் பின்னுக்குத் தள்ளிவிட்டு அடுத்தவர் நலனை முக்கியம் என்று கருதுவதுதான்! பேருந்தில் போகும்போது ஒரு முதியவருக்கோ, கர்ப்பிணிப் பெண்ணுக்கோ எழுந்து இடம் கொடுக்கிறீர்கள் என்றால், நின்றபடி பயணம் செய்யும் சிரமத்தைத் தாங்கிக்கொண்டு உதவி செய்ய முன்வருகிறீர்கள். இப்படித் தினசரி வாழ்க்கையில் பிறருக்குக் கொடையளிக்கும் தருணங்கள் நிறைய வரலாம்.

பணத்தையோ, நேரத்தையோ, உழைப்பையோ அடுத்தவர்களுக்குப் பகிரத் தயாராக இருக்கும் ஒருவரின் மனதில் எழும் உணர்வே கொடை. அடுத்தவர்களுக்கு இப்படி உதவிகள் செய்யும்போது ஒருவரின் மனம் உயர்வாக உணர்கிறது. மற்றவர்களுடன் இணைந்து ஒரு சேவையைச் செய்யும்போது சமூக உணர்வு பிறக்கிறது. நிறைய புதிய நண்பர்கள் கிடைக்கிறார்கள். தனிமையில் தவிக்கும் மனிதர்கள் இப்படிப்பட்ட சேவைகளைச் செய்யும்போது மற்றவர்களுடன் நெருக்கமாகிறார்கள். தங்கள் வாழ்வுக்கு ஓர் அர்த்தம் கிடைப்பதை உணர்கிறார்கள்.

பிறருக்கு மனமுவந்து கொடுக்கும் தருணங்களில், எல்லாவற்றையும் வேறு ஒரு கோணத்தில் பார்க்கும் பார்வை கிடைக்கிறது. ஐந்து ஆண்டுகள் பழசாகிவிட்ட தன் சொகுசு காரை மாற்றிவிட்டுப் புது மாடல் கார் வாங்க முடியவில்லை என்று ஏங்கினார் ஒரு பணக்காரர். அவர் வீட்டுக்கு அருகில் தள்ளுவண்டியில் வைத்து துணிகளை இஸ்திரி போட்டுத் தரும் தொழிலாளி ஒருவர் இருக்கிறார். அவர் கேட்டதற்காகப் பழைய சைக்கிள் ஒன்றை வாங்கித் தந்தார் பணக்காரர். அந்த சைக்கிள் எப்படித் தனக்கு உதவுகிறது என்று பெருமையாக அவர் சொன்னதைக் கேட்டபோது பணக்காரருக்குத் தன் கார் மதிப்பு வாய்ந்ததாகத் தோன்றியது.

வியாபாரத்தில், வேலையில், தொழிலில் ஏதோ ஒன்றைப் பெரிதாகச் சாதிக்கும்போது பெரும் மன நிறைவு கிடைக்கும். அதேபோன்ற நிறைவும் மகிழ்ச்சியும், யாருக்கேனும் கொடை தரும்போதும் கிடைக்கும். சுயநலம் பின்னுக்குத் தள்ளப்பட்டு, அடுத்தவர்களைக் கனிவுடன் பார்க்கும் பக்குவமும் கைகூடும்.

வீட்டு வேலைகளில் குடும்பத்தினருக்கு உதவுவது, வீட்டின் அருகே இருக்கும் சுற்றத்தினருக்குத் தினசரி வாழ்வில் உதவிகள் செய்வது, உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் அவர்கள் எதிர்பார்க்கும் தருணங்களில் உடன் இருந்து கைகொடுப்பது, பணியிடத்தில் சக ஊழியர்களுக்கு ஒத்தாசையாக இருப்பது, பொது இடங்களில் அறிமுகம் இல்லாத மனிதர்களையும் கனிவுடன் நடத்துவது என்று இருப்பவர்கள் எல்லோருமே இந்த உலகில் முன்மாதிரி மனிதர்கள். மற்றவர்களின் வாழ்வில் அவர்கள் மகத்தான மாற்றங்களை ஏற்படுத்துகிறார்கள்.

உதவிகள் செய்வதில் முக்கியமான விஷயம், உங்கள் சக்திக்கு மீறிய எதையும் வாக்குறுதியாகத் தரக்கூடாது, உதவியாகவும் செய்யக்கூடாது. அது உங்களை நெருக்கடியில் தள்ளி நிம்மதி இழக்கச் செய்யும். எனவே, ‘இயன்றதைச் செய்வோம் இல்லாதவருக்கு’ என்ற மந்திரத்தை நினைவில் வைத்துக்கொண்டு கொடை செய்யுங்கள்.



Owned, Published by K.R. NAGARAJAN, Published from 10, Sengunthapuram Mangalam Road, TIRUPUR - 641 604 & Printed by B. ASHOK KUMAR at RATHNA OFFSET PRINTERS, 40, Peters Road, Royapettah, Chennai - 600 014. Editor : T.J. GNANAVEL




SUKRA® SUPER FINE COTTON VESTS | RISE-UP® Premium Banians | ROMEX® BANIANS | BRIEF | TRUNKS | COMPACT® PREMIUM COTTON RIB VESTS | Breeze® Eye Let Vests | WinStripe® STRIPED BANIANS | ARCHERY® Gym Vest | ACOSTE® BANIANS | BRIEF | TRUNKS

suriya® RICH COTTON BRIEF | udaya® RICH COTTON BRIEF | minar® FINE COTTON BRIEF | merc® MERCERISED BRIEF | target® FINE TRUNKS | softex® FINE TRUNKS | imaxs® RIB TRUNKS | ARROW® RIB TRUNKS | VINTRACK® FINE TRUNKS

Available @ Ramraj Showrooms & All leading textile shops | Shop online @ www.ramrajcotton.in

Venmai Monthly - Postal Registration No.TN/TRU/28/2022-24. Registered with the Registrar of Newspapers for India under No.TNTAM/2016/68519. Day of Publishing 01-09-2024. Posted at Tirupur BPC on 5th of every month.

